விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 18 புதன்கிழமை (03.11.2004) தொலைபேசி - 2223378 ஒலி 320

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT ஆசியாக் கண்டத்தில் சிறந்து

# தடைப்பட்ட சமாதான பேச்சுக்களை மீள ஆரம்பிக்க ஜனாதிபதியின் யோசனைகளை விடுதலைப் புலிகள் ஆராய்வர்!

## செய்தியாளர் மாநாட்டில் அகாசி நம்பிக்கை



(நமது நிருபர்)

**தடைப்பட்டுப்போயுள்ள இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் ஜனாதிபதி முன்வைத்த யோசனைகளை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எடுத்துக் கூறியுள்ளோம். ஜனாதிபதி முன்வைத்த இந்த யோசனைகளை விடுதலைப் புலிகள் ஆராய்வர் என ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் முயற்சியுடன் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கு வருகைதந்த அகாசி ஜனாதிபதி, விடுதலைப் புலிகள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார். தனது முயற்சியின் பெறுபேறுகள் குறித்து இந்தியாவுக்கு விளக்குவதற்காக கொழும்பிலிருந்து புறப்பட முன்னர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கோப்ரல் ராஜபக்ஷ இன்று யாழ். உயர்நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

கடந்த 1996, 97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ். குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் குறித்த வழக்கு விசாரணை இன்று புதன்கிழமை யாழ். உயர் நீதிமன்றில் நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி வழக்கு தொடர்பான முக்கிய எதிரியும், கிரிஷாந்தி கொலை வழக்கின் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியுமான லான்ஸ்கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ இன்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார்.

இவ் வழக்கு விசாரணைக்காக கடந்த செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி யாழ். உயர்நீதிமன்றில் லான்ஸ்கோப்ரல் ராஜபக்ஷவை ஆஜர்ப்படுத்துமாறு உத்தரவிட்டபோது அன்றைய தினம் இவர் ஆஜர்ப்படுத்தப்படவில்லை. இதனையடுத்து இவ் வழக்கு இன்றைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிரிஷாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்[illegible]ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-19)

## இந்திய இராணுவத் தளபதி கதிர்காமருடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு நான்கு நாட்கள் விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய இராணுவத் தளபதி, நேற்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் கருத்து வெளியிடுகையில்,

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் நியமனங்களை வழங்கி உடன்பாட்டை மீறுகிறார் சந்திரிகா

### போர்க்கொடி தூக்குகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்களாக நியமித்தமையானது தமது கட்சியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறிய ஜனாதிபதியின் தன்னாதிக்க செயலாகுமென ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இந்த அமைச்சர்களின் நியமனம் ஆனது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை விளக்கும் செயலாக அமைந்துள்ளது.

அமைச்சர்களின் எண்ணிக்கையை 35க்கு மட்டுப்படுத்தவே மக்கள் தேர்தல் மூலமாக ஆணை வழங்கினர்.

அமைச்சரவை அந்தஸ்து அற்ற அல்லது திட்ட அடிப்படையில் அமைச்சுக்களை நியமிப்பதற்கு முன்னர் உடன்பாடு எட்டப்பட்டிருந்தது.

புதிதாக அமைச்சர்கள் நியமிக்கப்பட்ட

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இன்று இந்தியா பயணம்

(கொழும்பு)

இந்திய அரசின் அழைப்பின் பேரில் ஜனாதி[illegible] சந்திரிகா இன்று இந்தியாவுக்கு [illegible]ஜயம் செய்யவுள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி அங்கு இந்திய அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையின் தேக்க நிலை மற்றும் பேச்சுக்களை மீள ஆரம்பித்தல் தொடர்பாகவும் இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்தும் இந்தியத் தலைவர்களுடன் கலந்துரை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய ஆலோசனைச் சபையில் ஐ.தே.கட்சி பங்கேற்க வேண்டும்

### ரணிலிடம் சந்திரிகா நேரில் வலியுறுத்து





(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

நீண்ட நேரம் நடைபெற்ற இச்சந்திப்பில் ஜனாதிபதியுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் கலந்து கொண்டார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக அங்கு ஆராயப்பட்டது. சந்திப்பின் முடிவில் கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. இவ்வாறான சந்திப்புக்கள் தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தன்னால் உருவாக்கப்பட்ட சமாதானத்துக்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைக் கவுன்சிலில் ஐக்கிய தேசியக் கட்சி பங்குபற்றவேண்டும் என ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் இக்கவுன்சிலின் எதிர்கால நடவடிக்கைகளையும் அதனை எவ்வாறு மேற்கொள்வதென்பது குறித்தும் ரணிலுக்கு ஜனாதிபதி விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சியின் ஆதரவுடனேயே இவ் ஆலோசனைச் சபையின் நடவடிக்கை

(14 ஆம் பக்கம் பார்க்க)

### நாளைய வலம்புரியில்

குலுக்கல் முறைத் தெரிவிலான அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிப்பது எப்படி? (நாளை வலம்புரியில் வெளிவரும்)

## தமிழீழ மீட்புநிதிக் கடன் 4000 பேருக்கு மீளளிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீண்டும் இம்மாதம் மீளளிப்பு செய்யப்படவுள்ளதாக தமிழீழ நிதித்துறை அறிவித்துள்ளது. மூப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 4ஆயிரம் பேருக்கு இம்மாதம் மேற்படி கடன் மீளளிப்பு செய்யப்படவிருக்கிறது.

குடாநாட்டைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 17ம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை முகமாலையிலும் வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையும் கடன் மீளளிப்பு செய்யப்படவுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 3 ஆயிரம் பேருக்கு கடன் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. தற்போது 4 ஆயிரம் பேருக்கு மீளளிப்பு செய்யப்படவிருக்கின்றது.

மீளளிப்பு பெறுவோரின் பெயர் விபரங்கள் இன்று பத்திரிகைகளுக்கு வழங்குவதாக நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

(த)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள்

# தேசிய ஆலோசனை சபைக் கூட்டத்தில் ஐ.தே.க. கலந்து கொள்ளாதது ஏன்?

(கொழும்பு)

முதலில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதாலேயே ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் நடைபெற்ற சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனை சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லையென அக்கட்சியின் பிரதி பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறான கூட்டங்களில் கலந்து கொள்ள தமது கட்சி தயாராகவிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்வேறு கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் கருத்துக்களை ஆராய்வது தொடர்பான கூட்டங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இவ் ஆலோசனை சபை கூட்டத்தின் மூலம் உண்மையான பிரச்சினைகள் மறைக்கப்படுவதாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேகானந்த தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எவ்வாறான யோசனைகளை முன்வைத்தபோதும் விடுதலைப் புலிகளின் அமைப்பு தமது நோக்கங்களை எவ்வித தடையுமின்றி நிறைவேற்றிக் கொள்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-121)

# சதோச நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் ?

(கொழும்பு)

சதோச நிறுவனத்தின் தலைவர் உபாலி குணவர்த்தன அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவருக்குப் பதிலாக பிரதமுல்ல என்பவர் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு ஜெயராஜ் பெனாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அரிசி இறக்குமதி தொடர்பில் அமைச்சருக்கும் சதோச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் உபாலி குணவர்த்தனவுக்கும் இடையே நிலவிய முரண்பாடே இந்தப் பதவி நீக்க உத்தரவுக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரிசி இறக்குமதியில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் முன்னாள் தலைவர் உபாலி குணவர்த்தனவும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி ஜனாதிபதிக்கு அண்மையில் கடிதங்கள் அனுப்பியிருந்தனர்.

இம் முரண்பாடுகளை அடுத்து சதோச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் உபாலி குணவர்தனவை அப்பதவியிலிருந்து நீக்கும் முடிவை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே விடுத்திருப்பதாக தெரிய வருகிறது. (க-121)

# பேச்சுக்களை உடன் ஆரம்பிக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்

## ஜேர்மன் தூதுவரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைபை மையமாகக் கொண்டு இலங்கையில் தேக்க நிலை காணப்படும் சமாதான பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்படவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜேர்மன் தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள ஜேர்மனியத் தூதுவராலயத்தில் இலங்கைக்கான ஜேர்மனியத் தூதுவர் ஜோகன் வீத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்தித்து பேசினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொண்டனர். ஜேர்மனிய அரசியல்துறை சார்பாக திருமதி ஏட்நம் ஜங்கும் கலந்துகொண்டார். இங்கு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலும் தெரிவிக்கையில், சமாதான பேச்சு ஏறக்குறைய ஒன்றரை வருடத்திற்கு மேலாக தேங்கிக் கிடக்கிறது. ஒருவேளை யுத்தநிறுத்தத்திற்கு பாதிப்பு ஏற்படவும் கூடும்.

எனவே இதனை கவனத்திற் கொண்டு பேச்சை விரைவில் ஆரம்பிக்க ஜேர்மனி அரசு ஸ்ரீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு நிதியுதவியாக வழங்கவுள்ள 4.5 மில்லியன் ரூபா நிதியுதவிகளை பேச்சுவார்த்தை ஆரம்பித்தால் மாத்திரமே வழங்க முன்வரவேண்டும். ஜேர்மனி நாட்டில் இலங்கையில் இருந்து சென்று அகதிகளாகத் தஞ்சமடைந்த தமிழ் மக்களைத் திருப்பி அனுப்புதல் நிறுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார். (ற)

# வெள்ளவத்தை கொலை சம்பவத்திற்கு ம.ம.முன்னணித் தலைவர் கண்டனம்

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பகுதியில் தமிழ் மாணவன் ஒருவன் கொடூரமாக அடித்துக் கொலைசெய்யப்பட்டதை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

தாக்கியவர்கள் நீ தமிழன் தானே எனக்கேட்டு மோசமாகத் தாக்கியதுடன் குறிப்பிட்ட மாணவன் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தபோது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவிடாது தடுத்திருந்தனர்.

இதனை தற்செயலான நிகழ்ச்சியாகவோ அல்லது தனிநபர்களுக்கு இடையிலான பிரச்சினையாகவோ கருதி விடமுடியாது.

தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக மாத்திரம் மிருகத்தனமான முறையில் தமிழர்களை கொன்று குவிப்பதை அனுமதிக்க முடியாது. அண்மையில் இதே போன்று வயோதிபர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டதுடன் குடும்பத்தவர்கள் மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்டனர். இத்தகைய சம்பவங்களை சமாதானம் பற்றிப் பேசுபவர்கள் எவ்வாறு நியாயப்படுத்தப் போகிறார்கள் எனத் தெரியவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (க)

# கழிவுகள் அகற்றும் பணிகளை மாநகர சபையினர் கைவிட்டனர்

# யாழ். போதனா வைத்தியசாலையினுள்ளும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படும் அபாயம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கழிவுப்பொருட்களைக் கொட்டுவதற்கு உரிய இடமின்மை காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கழிவுப்பொருட்களை அகற்றும் பணியை யாழ்ப்பாணம் மாநகர சபை நேற்றுடன் நிறுத்திக்கொண்டுள்ளது.

இதனால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கழிவுப்பொருட்களை அகற்றுவதில் வைத்தியசாலை நிர்வாகம் திண்டாடிவருவதாக தெரியவருகின்றது. இருந்தபோதிலும்கூட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்கின்ற கழிவுப்பொருட்களை மாநகர சபையே அகற்றவேண்டும் என்று வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

இக்குறித்த பணிக்காக வைத்தியசாலை நிர்வாகம் மாதாந்தம் 40 ஆயிரம் ரூபாவை மாநகரசபைக்கு வழங்கி வருகின்றது.

ஆயினும் வைத்தியசாலையில் கழிவுப்பொருட்களை எரித்து அழிப்பதற்கு போதிய இயந்திர வசதியும் இல்லாமல் இருப்பதாகவும் இதனால் வைத்தியசாலையில் தினசரி சேர்கின்ற கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு எரிபொருளும் விறகும் தரவேண்டும் என மாநகரசபை கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து வைத்தியசாலை நிர்வாகம் சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மாநகர சபையினால் காக்கை தீவு கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதற்கு அப்பகுதி மக்கள் காட்டிய எதிர்ப்பைத் தொடர்ந்து இப்பிரச்சினை இப்போது உருவாகி உள்ளதாக யாழ். மாநகரசபையின் ஆணையாளர் கலாநிதி க. குணராசா தெரிவித்துள்ளார்.

எனினும் வைத்தியசாலையில் சேர்கின்ற கழிவுப் பொருட்களை அகற்றி வேறு ஒருவெறுமையான இடத்தில் கொட்டி எரிப்பது தொடர்பாக சபை தற்போது ஆராய்ந்து வருவதாக அறியப்படுகின்றது.

தற்போது யாழ்ப்பாணத்தில் மழைக்காலம் நிலவுவதால் யாழ். வைத்தியசாலையில் கழிவுப்பொருட்கள் அகற்றப்படாத பட்சத்தில் அங்கும் நகரத்திலும் பெரும் சுகாதாரச் சீரகேடுகள் ஏற்படுவதுடன் தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாயமும் எற்படலாம் என அஞ்சப்படுகின்றது. (ப-16)

# கால்நடைகளை கட்டி வளர்க்குக இன்றேல் அபராதம் விதிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல இடங்களிலும் கட்டாக்காலி ஆடு, மாடுகள் போக்குவரத்திற்கு இடையூறாகவும் விபத்து உள்ளிட்ட சேதங்களை விளைவிப்பனவாகவும் அலைந்து திரிவதாகப் பலர் யாழ். மாநகரசபையில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வீடுகளில் கட்டிவளர்க்காது இவ்வாறு வீதிகளில் மேய்ச்சலுக்காகத் துரத்தி விடப்படும் கால்நடைகளைப் பிடிப்பதற்கும், அவற்றை உரியவர்களிடம் மீளளிக்கும்போது அதற்கான தண்டப் பணத்தினை வசூலிப்பதற்கும் யாழ்ப்பாண மாநகர சபை முடிவு செய்துள்ளது.

இந் நடைமுறை எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுமென யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க. குணராசா அறிவித்துள்ளார். (ற)

# யாழ். மாநகரசபையால் நடாத்தப்பட்ட உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி யாழ். மாநகரசபையால் நடாத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியோரின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் வருமாறு:

**கட்டுரைப் போட்டி**

**கீழ்ப்பிரிவு:**

1ஆம் இடம் சியாம் செஞ்சூட் சுதர்சன அஜந்தன் - புனித பத்திரிசியார் கல்லூரி, 2 ஆம் இடம் ஜனனி செந்தில்நாதன் - வைத்தீஸ்வராக் கல்லூரி, 3 ஆம் இடம் ஜீவராஜா ஜனந்ராஜ் - புனித பத்திரியார் கல்லூரி, 3 ஆம் இடம் : ஷர்மிளா ஜெகதீஸ்வரன் - யாழ் இந்து மகளிர் கல்லூரி.

**மேற்பிரிவு**

1 ஆம் இடம் : நடேசன் திபேரியல் - புனித பத்திரிசியார் கல்லூரி, 2 ஆம் இடம் சுதர்சனா செல்வராசா - கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம், 3 ஆம் இடம் டில்சாந்தி யேசுதாஷன் - இந்து மகளிர் கல்லூரி.

**பேச்சுப் போட்டி**

**கீழ்ப்பிரிவு**

1 ஆம் இடம் சவுந்தரம் ஜோ. சஞ்சுதன் - புனித பத்திரிசியார் கல்லூரி, 2 ஆம் இடம் பாலசுப்பிரமணியம் சாரங்கன் - யாழ் இந்துக் கல்லூரி, 3 ஆம் இடம் ஜோ. பி. ஜோன் செல்ரன் - புனித பத்திரிசியார் கல்லூரி.

**மேற்பிரிவு**

1 ஆம் இடம் சிவகஜனி சிறிக்குமார் - வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலை, 2 ஆம் இடம் அஜந்தாயினி ஜீவதாசன் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, 3 ஆம் இடம் றொக்பெர்னாண்டோ றொசான் - புனித பத்திரிசியார் கல்லூரி.

இதேவேளை, உள்ளூராட்சி வாரத்தையொட்டி சிறந்த செயற்பாடுகளை வழங்கும் நிலையங்களும் ஆரோக்கியமான கர்ப்பவதி மற்றும் ஆரோக்கியமான சிசு என்பனவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:

**சிறந்த சனசமூக நிலையம்**

1 ஆம் இடம் நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையம், 2 ஆம் இடம் கந்தர்மடம் ஜனசக்தி சனசமூக நிலையம், 3 ஆம் இடம் அரியாலை சனசமூக நிலையம்.

**சிறந்த தேநீர்ச்சாலை**

வள்ளி விலாஸ் (290 கோவில் வீதி நல்லூர்)

**சிறந்த உணவுச்சாலை**

தாமோதரம் விலாஸ், (இல. 403, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்)

**சிறந்த வெதுப்பகம்**

“ருவிங்கில் ஸ்ரார் வெதுப்பகம் (இல. 173 கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு கொழும்புத்துறை)

**ஆரோக்கியமான கர்ப்பவதி**

திருமதி சிவநாதன் சர்மிளா, (ஜே\109 கிராம உத்தியோகத்தர் பிரிவு)

**ஆரோக்கியமான சிசு**

சாந்தசீலன் அபசனா (ஜே/94 கிராம உத்தியோகத்தர் பிரிவு)

**மென்பந்து கிரிக்கெட் போட்டி**

(சனசமூக நிலையங்களின் சமாசம்)

1 ஆம் இடம் அரியாலை சனசமூக நிலையம், 2 ஆம் இடம் ஸ்ரார் சனசமூக நிலையம்.

**ஆரோக்கியமான கர்ப்பவதி – 2003**

திருமதி ஜெகதீஸ்வரி புவிராஜசிங்கம் (ஜே/105 கிராம உத்தியோகத்தர் பிரிவு)

**ஆரோக்கியமான சிசு – 2003**

ஜே. செல்வி காருண்யா ரவிச்சந்திரன்.

வெற்றியீட்டிய அனைவருக்கும் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

எனவே வெற்றியீட்டிய அனைவரையும் தவறாது இந் நிகழ்வில் கலந்து கொண்டு பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க. குணராசா அறிவித்துள்ளார். (ற-5)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மீன்பிடி நீர்வாழ்வியல் மூலகங்களுக்கான சங்கத்தின் கடற்கரை வளங்களை பாதுகாத்தலும் முகாமைத்துவம் செய்தலும் என்பது தொடர்பான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் 4.00 மணிவரை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இச்சங்கத்தின் உயர் அதிகாரிகள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதர உள்ளனர். (ற-19)

# வருடாந்த பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் ம. கணபதிப்பிள்ளை தலைமையில் கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக இளைப்பாறிய ஆங்கில ஆசிரியையும் இப்பாடசாலையின் பழைய மாணவியுமான திருமதி செல்வராசா திலகவதியும் சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் நந்தகுமாரும் கோட்டக்கல்வி அதிகாரி புஸ்பலிங்கமும் கலந்துகொண்டனர். (ப-104)

## வடக்கு ஈராக்கில் பரிதாபம்

# அமெ. படைத்தளத்திற்கு ஏவிய ஏவுகணை தொழிலாளர் விடுதியில் வீழ்ந்து வெடித்தது

### 19பேர் உயிரிழப்பு; 8பேர் பருகாயம்

(திக்ரித்)

வட ஈராக்கின் திக்ரித் நகரில் ஆலைத் தொழிலாளர்கள் தங்கியிருந்த விடுதிமீது பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்ததில் 19பேர் இறந்தனர். 8பேர் காயமடைந்தனர்.

சதாம் ஹுசைன் அதிபராக இருந்தபோது வட ஈராக்கில் அவருக்குச் சொந்தமாக விளங்கிய மிகப்பெரிய அரண்மனை வளாகத்தில் அமெரிக்க இராணுவத்தின் தளம் அமைந்துள்ளது. இந்தத் தளத்தை இலக்குவைத்து தீவிரவாதிகள் பீரஙக்க குண்டுகளை வசினா. ஆனால அது இலக்குத்தவறி தொழிலாளர் விடுதியில் விழுந்து வெடித்தது.

இதற்குமுன்னரும் ஒருதடவை அமெரிக்க இராணுவத் தளத்தை இலககு வைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அப்போதும் இலக்குத் தவறி இதே விடுதிமீது விழுந்தது.

இந்த விடுதியில் கட்டுமானத் தொழிலாளர்கள் தங்கி வேலைபார்த்து வருகின்றனர்.


எதிரிகளுக்குப் பெரும் தாக்கத்தை விளைவிக்கக்கூடிய விதத்தில் அமைக்கப்பட்டுள்ள ஏவுகணை என்பதால் சமபந்தப்பட்ட விடுதி முற்றாக இடிந்து வீழ்ந்தது.

இக் கட்டட இடிபாடுகளுள் மேலும் பலர் சிக்கிக்கொண்டிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

அமெரிக்கப் படைத்தளத்திற்கு இலககு வைத்து ஏவப்பட்ட இவ் ஏவுகணை குறிதவறியமைக்குத் தீவிரவாதிகளின் ஏவுதளப் பகுதியில் உள்ள குறைபாடுகளே காரணம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ப)



பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் பிரான்சில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் குணமடையவேண்டும் என பரீஸ் ஆஸ்பத்திரி முன்பு குழந்தைகள் தீபம் ஏற்றி வழிபட்டனர்.



புதுவை சுதந்திரப் பொன்விழாவினையொட்டி நேற்று சட்டப்பேரவையில் ஜனாதிபதி அப்துல் கலாம் சிறப்புரை யாற்றியபோது எடுத்த படம். அருகில் கவர்னர் எம்.எம்.லகேரா, சபாநாயகர் எம்.டி.ஆர் ராமச்சந்திரன் உள்ளனர்.

# சீன இராணுவக் கட்டமைப்பு பிளவுபடும் என அபாய அறிவிப்பு

### மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி

உலகின் மிகப்பெரிய இராணுவம் சீன இராணுவம்தான். அங்கு 20லட்சம் இராணுவ வீரர்கள் உள்ளனர். நாட்டை ஆளும் கம்ய,னிஸ்டு கட்சியின் கட்டுப்பாட்டின் கீழ்தான் சீன இராணுவம் இயங்குகிறது.

சீன அதிபர்தான் இராணுவத்தின் மீது முழுக்கட்டுப்பாடு செலுத்துவார். இந்த நிலையில் சீனாவின் அதிபராக இருந்த ஜியாங் செமின் கடந்த செப்ரெம்பர் மாதம் சீன இராணுவத்தின் மீதான முழு அதிகாரத்தை அதிபர் ஜின்டோவடம




ஒப்படைத்தார். இருந்தும்கூட ஜியாங் செமின் இன்னும் இராணுவத்தின மீது கட்டுப்பாடு செலுத்திவருகிறார்.

அண்மையில் அவர் அவருக்கு ஆதரவாகவுள்ள 80 இராணுவ அதிகாரிகளை ஜெனரல் அந்தஸ்துக்கு உயர்த்தினார். இதனால் சீன இராணுவத்தில் தற்போது விரிசல் ஏற்பட்டுள்ளது.

சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் அதிகாரபூர்வ நாளிதழ் இந்த விரிசல் குறித்து சூசகமாக முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது. அது கூறியிருப்பதாவது,

சீன இராணுவத்தின் ஒற்றுமையை கடடிக்காக்கவேண்டும. கம்யூனிஸடு கட்சியின் உத்தரவுக்கு மட்டுமே சீன இராணுவம் கட்டுப்படும் நிலையில் அதன் ஒற்றுமை நீடிக்கும. மாறாக வேறு உத்தரவுகளுக்கு அது கீழ்ப்படியத் தொடஙகினால் சீன இராணுவத்தில் பிளவு ஏற்படும். தற்போது ஏற்பட்டுளள ஆபததான காறறு, கொடிய அலைகள் போன்ற சோதனைகளைத் தாண்டி சீன இராணுவம் வெற்றியடை[illegible] என்று நம்புகிறோம்.

இவ்வாறு அந்த நாளிதழ் எச்சரித்துள்ளது. சீன இராணுவத்தில் கருத்து மோதல் விரிசல் ஏறபட்டிருப்பதால சீனமக்கள் அதிர்சசியடைந்துபோயுள்ளனர். (ப)

### வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகளுடன்

# அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் நேற்று ஆரம்பித்தன

அமெரிக்காவில் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகளுடனான அதிபர் தேர்தல் வாக்குபபதிவுகள் நேற்றையதினம் ஆரம்பித்துள்ளன. ஆரம்பகட்டக் கணிப்புகளின்படி ஆளும் குடியரசுக் கட்சி வேட்பாளர் முன்னிலையில் இருந்துவருகிறார்.

இந்நிலையில் அமெரிக்காவின் முக்கிய மையங்கள் மீது தாக்கப்போவதாக அல்- கெய்டா இயக்கம் விடுத்த எச்சரிக்கையால் அமெரிக்காவின் வாக்குச் சாவடிகள் உடபட மக்கள் கூடும் இடமெங்கும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

உலகிலேயே சக்திவாய்ந்த பதவி வலலரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதிப் பதவிதான். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் நேற்று ஓட்டுப்பதிவு ஆரம்பிததுள்ளது. இதில் ஆளும் குடியரசுக் கட்சி சார்பில் அதிபர் புஷ் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்தது ஜனநாயகக் கட்சி வேட்பாளராக செனட்டர் ஜோன் கெரி நிற்கிறார். மேலும் சிலர் களத்தில் இருந்தாலும் உண்மையான போட்டி புஷ்ஷுக்கும் கெரிக்கும் இடையேதான் நடக்கிறது.

இருவரும் தீவிர தேர்தல் பிரசாரம செய்தார்கள். டெலிவிஷனில் நேருக்குநோ வாதம்செய்து தங்கள் கொள்கை திட்டங்களை எடுத்துக்கூறினார்கள். பிரசாரம் முடிநதுவிட்டது. இந்தத் தேர்தலில வெற்றிவாய்ப்பு யாருக்கு என்பது பற்றி அமெரிக்க மீடியாக்கள் அவ்வப்போது கருத்துக்கணிப்பு நடத்தி முடிவுகளை வெளியிட்டுவருகின்றன.

தொடக்கத்தில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்புகளில் ஜோன் கெரியைவிட ஜோர்ஜ் புஷ் முன்னணியில் இருந்தார். புஷ்ஷுக்கு 48 சதவீதம் பேர் ஆதரவும, கெரிக்கு 46 சதவீதம் பேர் ஆதரவும் இருந்தது. அமெரிக்கா மீது மீண்டும் தாக்குதல் நடத்துவோம் என்ற அல் - கெயடா இயக்க தலைவன் பின்லேடன விடுத்த எச்சரிக்கை அல்ஜசீரா ரீ.வியில ஒளிபரப்பபப்பட்டதைத் தொடர்ந்து புஷ்ஷுக்கான ஆதரவு குறைந்தது. நேற்று முன்தினம் நடந்த கருத்துக்கணிப்பில கெரிக்கு 47 சதவீதமும் புஷ்ஷுக்கு 46 சதவீதமும் ஆதரவு இருந்தது.

நேற்றுமுன்தினம் கடைசி நேரத்தில் நடந்த கருத்துக்கணிப்பில புஷ் மீண்டும முனனிலை பெற்றுள்ளார். புஷ்ஷுக்கு 48 சதவீதமும், கெரிக்கு 47 சதவீதமும் ஆதரவு இருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

இந்த ஒரு சதவீதம் என்பது பெரிய வித்தியாசம் இல்லை. போட்டி கடுமையாகத்தான் உள்ளது. யார் வெற்றி பெறாலும் குறைந்த ஓட்டு விததியாசத்தில் தான் வெற்றிபெறுவார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் போடும் ஓட்டுக்களை வைத்து நேரடியாக வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படுவது இல்லை. தேர்தல் சபை ஓட்டுக்களை வைத்துததான் வெறறி தோல்வி முடிவுசெய்யப்படும்.

ஒவ்வொரு மாநிலத்தின் அளவைப் பொறுத்து அந்த மாநிலத்துக்கு இததனை தேர்தல் சபை ஓட்டுக்கள் என்று நிர்ணயிக்கப்படுகின்றன. ஒரு மாநிலத்தில் எநத வேட்பாளர் அதிக வாக்காளர் ஓட்டுப் பெறுகிறாரோ அந்த மாநிலத்தின் அனைத்து தேர்தல சபை ஓட்டுக்களும் அந்த வேட்பாளருக்கே சேரும். மொத்தம் 270 தேர்தல் சபை ஓட்டுக்களை பெற்றுவிட்டால் அமெரிகக ஜனாதிபதி ஆகிவிடலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)




சிலி நாட்டின் யுனிநகரில் சுற்றுலாவை மேம்படுத்த சர்வதேச பலூன் திருவிழா நடந்துவருகிறது. இதில் ஒரேசமயத்தில் நூற்றுக்கணக்கான இராட்சத பலூன்கள் வானில் பறக்கவிடப்பட்டன. படத்தில் பலூனகள் வானில பறக்கத் தயாராவதைக் காணலாம்.

### அமெரிக்கா, இங்கிலாந்து மீது தாக்குவதற்காக

# ஒஸாமா பின்லேடனை விடவும் கொடூரமானவர் தளபதியாக நியமனம்

(புதுடில்லி)

அல் - கெய்டா இயக்கம் சார்பில் அமெரிக்க, இங்கிலாந்து உட்பட உலகம் முழுவதும் தாக்குதல் நடத்தும் தளபதி பொறுப்பை அல்-லிப்பி என்பவர் ஏற்றுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர் பின்லேடனைவிட கொடூரமானவர் என்று கூறப்படுகிறது. பின்லேடனின் அல்-கெய்டா இயக்கத் தீவிரவாதிகள் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பா மாதம் 11ஆம் திகதி அமெரிக்காவில் பயணிகள் விமானங்களைக் கடத்தி நியூயோர்க் நகரில் 110 மாடி இரட்டைக் கோபுரம் மறறும பெண்டகன இராணுவ தலைமையகத்தைத் தாக்கி அழித்தனர்.

இதில் ஏறத்தாழ 4ஆயிரம் பேர் பலியானார்கள். அதைத்தொடர்ந்து பிலிப்பைன்ஸ் உட்பட உலகின் பல்வேறு நாடுகளில் தாக்குதல் நடத்தியும் பின்லேடனை மட்டும் பிடிக்கமுடியவல்லை. அவரும் அவரது முக்கிய தளபதியுமான அல் - ஜவாகிரியும் எங்கு மறைந்திருக்கிறார்கள் என்பது உறுதியாகத் தெரியவில்லை.

அதேசமயம் அவரது தீவிரவாத இயக்கத்தின் தாக்குதல மட்டும் தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது. கடந்தவாரம் பின்லேடன் பேசிய வீடியோக்கசட் அல்ஜசீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பபப்பட்டது. அதில் அமெரிக்கா மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்போ வதாகப் பின்லேடன் எச்சரித்திருந்தா.

இந்தநிலையில் அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட உலகம் முழுவதும் அல் -கெய்டா இயக்கம நடத்த இருக்கும் தாக்குதலுக்கான தளபதிப் பொறுப்பை வட ஆபிரிக்காவைச் சேர்ந்த அல் - லிப்பி எனபவர் ஏற்றுளளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இவர் திட்டமிடுவதிலும் பழிவாங்குவதிலும் பின்லேடனையும் அவனது கூட்டாளி அல- ஜவாகிரியையும்வட கொடூரமானவன் என்று கூறப்படுகிறது.

பாகிஸ்தானில் அல்- கெய்டா இயக்கத் தீவிரவாதிகள பலர் பிடிபடடனர். அவாகளிடம் பாகிஸ்தான உளவுத்துறை விசாரணையின்போதெல்லாம் அல் - லிப்பியின் பெயரைத்தான் உச்சரித்துள்ளனர். உலகம் முழுவதும உள்ள அல்-கெய்டா படைகளுடன் அல் - லிப்பிக்கு தொடர்புண்டு என்றும் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலுமுள்ள அல் - கெய்டா படைகளுக்கு எதிர்காலத் தாக்குதல்கள் பற்றி கம்யூட்டர் மூலம் கட்டளைகள் பிறப்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் 2001ஆம் ஆண்டு நடந்த தாக்குதல் காலித்ஷேக் முகமது தலைமையில் நடந்தது. அப்போது காலித்ஷேக் முகமதுவின் கீழ் அல்-லிப்பி பணியாற்றினார். காலித்ஷேக் முகமது கடந்த ஆண்டு மார்ச்மாதம் ராவல்பிண்டியில் கைது செய்யபபட்டதும் அவரது பொறுப்பை அல் -லிப்பி ஏற்றுக்கொண்டாா. அதன்பிறகு இப்போது இந்த பெரிய பதவிக்கு வந்துள்ளார். இவர் பின்லேடனின் நம்பிக்கைக்குரியவா. அல்- லிப்பி பாகிஸ்தானில் இருந்தபோது அவரைச் சந்திக்க இங்கிலாந்தில் இருந்து அல்-கெயடா இயக்கத்தினர் 3பேர் வந்துள்ளனா. மேற்கண்ட தகவல்களை பாகிஸ்தானில் பிடிபட்ட அல்-கெய்டா இயக்கத்தினர் தெரிவித்ததாக பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.(ப)

# பதவியைத் தக்கவைப்பதற்காக மட்டுமே ரவூப் ஹக்கீம் செயற்பட்டு வருகிறார்

## வடமாகாண முஸ்லிம்கள் சுட்டிக்காட்டு

(புத்தளம்)

வடமாகாண முஸ்லீம்களின் உரிமையைப் பெற்றுத்தருவதிலோ அன்றி அவர்களது அபிவிருத்தியிலோ எவ்வித அக்கறையும் காட்டாது தமது தலைமைப் பதவியை மட்டும் தக்கவைத்துக் கொள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரிஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் செயற்படுவதாக வடமாகாண முஸ்லிம்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது விடயம் குறித்து தேசத்தின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீது வீணான பழியைச் சுமத்துவதும் வேதனை தருவதாகத் தெரிவித்துள்ளனர்.

வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் வன்னிப் புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்றுக் கொண்டதை தாங்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளதாக கூறும் இம்மக்கள் வடமாகாண முஸ்லீம்களின் தலைவர் ரவூப் ஹக்கீம் அல்ல என்றும் கூறியுள்ளனர்.

கடந்த ஐ.தே.கட்சியின் ஆட்சியில் வடபகுதி முஸ்லீம்களின் அடிப்படை அபிவிருத்தி குறித்து பேசாமல் மௌணியாக இருந்த ரவூப் ஹககீம், தற்போது தனித்தரப்பு குறித்துப் பேசுவது, வேடிக்கையாக உள்ளது.

மக்களது அபிவிருத்தியும், முன்னேற்றமும் தமக்குத் தேவையில்லை பதவிகளும் பாதுகாப்பான வாழ்க்கையும் மட்டுமே தேவையென நடந்துகொண்ட ரவூப் ஹக்கீம் வடமாகாண முஸ்லீம்களின் ஏகப் பிரதிநிதியான அமைச்சுப் பொறுப்பை ஏற்றுள்ள விசாக்பதியுதீன் மீது அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் வடக்கு முஸ்லிம்கள் கூறியுள்ளனர்.

வடக்கு முஸ்லிம்களின் நலன் கருதி இந்த அமைச்சுப்பதவியை வடக்குக்கு பெற்றுதந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (ந-15,121)

# நாடு பெரும் பின்னடைவுக்குள் செல்வதை ம.வி. முன்னணி ஏற்றுக்கொண்டுள்ளது

(கொழும்பு)

ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்தின் காலத்தில் நாடும் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் விடுதலையின் முன்னணி ஏற்றுக்கொண்டுள்ளதாக ஐக்கியதேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

மாத்தறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சு அனுரகுமார திஸ்ஸநாயக்க இது தொடர்பாக தெளிவாக விளக்கியிருந்தாக ஐக்கிய தேசியக் கட்சியின பிரதிப் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸஅத்த நாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி இந் நிலையினை முன்னர் சுட்டிகாட்டிய போதிலும் கூட்டமைப்பு அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் அதை நிராகரித்து விட்டனர்.

அதேபோல் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமைக்கு மத்திய வங்கியின் சில அதிகாரிகளின் சதித்திட்டமே காரணம் என மக்கள் விடுதலை முனனணியைச் சேர்ந்தோ சிலர் பகிரங்கமாக தெரிவித்திருநதனர்.

குறிப்பாக மக்கள் விடுதலை முனணியின் அமைச்சரான அனுரகுமார திஸ்ஸ நாயக்க இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் அமைச்சர் அனுரகுமார திஸ்ஸ நாயக்காவின் கருததுக் குறித்து பகிரங்கமாக தமது நிலைப்பாட்டை மக்கள் விடுதலை முன்னணி முன்வைக்க வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க தெவித்தார். (க-10)

# நாயன்மார்கட்டில் வைத்து சந்தேக நபர் ஒருவர் கைது

நாயன்மார்கட்டுப் பகுதியில் வைத்து சந்தேகநபர் ஒருவரை மடக்கிப்பிடிக்க முயன்ற பொலிஸ் குழுவிற்கும சம்பந்தப்பட்ட சந்தேக நபர் சார்ந்தவர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் முறுகல் ஏற்பட்டுள்ளது.

கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள கடைஒன்றில் இருந்து பதினாறாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடி இருப்பதுடன், பல்வேறுபட்ட திருடடுச் சம்பவங்களுடனும் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின் பெயரில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ஒருவர் நாயன்மார்கட்டுப் பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருப்பதாக கிடைத்த தகவல் அடிப்படையில் அவரை மடக்கிப் பிடிக்க முற்பட்ட பொலிஸ் குழுவினரை,

சம்பந்தப்பட்ட சந்தேக நபரது சகாக்களும் உறவினர்களும் தடுத்து நிறுத்த முற்பட்டபோது, பொலிஸாருக்கும் அவர்களுக்கும் இடையே பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து உசார் அடைந்த பொலிஸார் சம்பந்தப்பட்ட சந்தேக நபரை வெற்றி கரமாக கைது செய்துள்ளனர். (ப)

## விசேட பொதுக் கூட்டம்

(சாவகச்சேரி)

யாழ்மாவட்ட உள்ளூராட்சி மன்ற வருமான மேற்பார்வையாளார்கள், பரிசோதகர்கள் சங்க விசேட பொதுக் கூட்டம் மானிப்பாய் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் எதிர்வரும 7ஆம் திகதி ஞாயிறு காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளும் படி சங்கத்தலைவர் ம. நிர்மலானந்தன் கேட்டுள்ளார். (ப-29)

## பெறுபேறுகள் வெளிவரும்

(யீாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடநத ஆண்டு நடைபெற்ற கலை முதல் தேர்வு, வணிக முதற் தேர்வு, வணிகமாணி பகுதி 1, வணிகமாணி பகுதி11,வெளிவாரிப் பரீட்சைகளின் பெறுபேறுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிடப்படும் என வெளிவாரிப் பரீட்சைகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 2003,2004 புதிய கல்வியாண்டுக்குரிய யாழ்.பல் கலைக் கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கான பதிவுத் திகதி எதிர்வரும் 15 ஆம திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே மாணவர்களை தத்தமது விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (ந-5)

# இராணுவத்தினரின் பாவணையிலிருந்த வீடு உரிமையாளரிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமை ஆணைக் குழுவின் நடவடிக்கைகளை அடுத்து இராணுவத்தினரின் பாவணையில் உள்ள பொது மக்களின் வீடொன்றை இராணுவத்தினர் உரியவர்களிடம் கையளித்துள்ளனர்.

கடந்த கால யுத்தம் காரணமாகக் குடாநாட்டை விட்டு மக்கள் வெளியேறிய போது யாழ்ப்பாணம திருநெல்வேலி வடக்கில் அமைந்துள்ள தங்கேஸ்வரனின் வீட்டில் இராணுவத்தினர் குடிகொண்டிருந்தனர்.

இதனால் தாம் தமது சொந்த வீட்டில் இருப்பதற்கு இராணுவத்தினரிடம் இருந்து தமது வீட்டைப் பெற்றுத் தரும்படி திருமதி தங்கேஸ்வரன் கடந்த வருடம் மார்ச் மாதம் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து மனித உரிமை ஆணைக்குழுவினரது தொடர் செயற்பாட்டினால் கடந்த மே மாதம் 5ஆம் திகதி இராணுவத்தினரால் அவ்வீடு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

அவ்வீடு சேதத்திற்கு உள்ளாகியிருந்தமையினால் அவ் வீட்டை உரிமையாளர்கள் புனரமைத்து நேற்று முன்தினம் அவ் வீட்டில் குடியமர்ந்துள்ளனர்.

இது குறித்து வீட்டு உரிமையாளர்கள் நேற்று மனித உரிமை ஆணைக்குழுவிற்கு நன்றி தெரிவித்துள்ளனர். (ந-19)

# மலேஷியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த ஐம்பத்தெட்டு இலங்கையர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக மலேசியாவில் தங்கியிருந்த ஐம்பத்தெட்டு இலஙகையர்கள் நேற்று முன்தினம் மாலை நாடு திரும்பியுள்ளனர்.

கோலாலம்பூரில் இருந்து இவர்கள் கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொழில் முகவர் நிலையத்திற்கு தலா 2 லட்சம் ரூபாவை செலுததி சுற்றுலா விசாவைப் பெற்று தொழில் வாய்ப்பைப் பெறும் எதிர்பார்ப்புடன் இவர்கள் மலேசியாவுக்குச் சென்றிருந்தனர்.

இவர்களில் எவரும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் தம்மை பதிவு செய்திருக்கவில்லை என வெளிநாட்டு வேலைவாய்புப் பணியகத்தின் தலைவர் கருணாசேன கெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

சட்டவிரோதமாக மலேசியாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் அங்கிருந்து வெளியேறுவதறகு மலேசிய அரசினால் வழங்கபபட்ட பொது மண்ணிப்புக் காலத்தைப் பயன்படுத்திய இவர்கள் மீண்டும் இலங்கை வந்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ந-121)

## சட்டஆலோசனை

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றம் வழங்கும் இலவச சட்ட ஆலோசனைகள் கடந்த மாதம் 27ஆம திகதி தும்பளை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சட்ட உதவி மன்ற தலைமைப் பீடத்தின் பிரதி நிதியாக சட்டத்தரணி செல்வி அன்ன பாக்கியம் சிதம்பரப்பிள்ளை பங்கு பற்றினார்.

இவருடன் யாழ் மாவட்ட இணைப்பாளர் செல்வி சாந்தா அபிமன்ன, சிங்கம, அரச சட்டத்தரணி செல்வி சுகந்திகந்தசாமி உட்பட 9 சட்டத்தரணிகள் பங்குபற்றி இலவச சட்ட ஆலோசனைகள் வழங்கினார்கள். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் பங்குபற்றி சட்ட ஆலோசனை பெற்றுக் கொண்டார்கள். (ப-104)

# இந்திய இராணுவத்தளபதி இன்று அனுராதபுரம், வவுனியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

இந்திய இராணுவத் தளபதி விச் நேற்று முன்தினம் இலங்கையின் இராணுவ தளபதி சாந்த கொட்டேகொடவை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதன்போது இருதரப்பு இராணுவ நலன்கள் குறித்து பேசப்பட்டுள்ளன.

இதேவேளை இதற்கு முன்னர் இந்திய இராணுவத் தளபதிக்கு இராணுவத் தலைமையகத்தில் வைத்து இராணுவ மரியாதை அணி வகுப்பு ஒன்றும் வழங்கப்பட்டது.

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதறகு தயாராகி வருகின்ற நிலையிலும், இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதுடில்லிக்கு விஜயம் செய்யவிருக்கின்ற நிலையிலும் இவரது இந்த விஜயம் முக்கியத்துவம் பெற்றுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் இராணுவ தலைமையகத்தில் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சாந்த கொட்டோகொடவைச் சந்தித்த பின்னர், இலங்கைக்கான இந்திய தூதுவர் நிருபமா ராவை சந்தித்த பின்பு வெளி விவகார அமைச்சில் அமைச்சா லக்ஸ்மன் கதிரகாமரையும் சந்தித்து உரையாடினார்.

நேற்று கூட்டுப் படைகளின் பிரதம தளபதியும் கடற் படைததளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சாந்தகிரி, விமாணப் படைத் தளபதி ஏயர் வைஸ் மாாஷல் டொனால்ட் பெரோ ஆகியோரையும் படைகளின் தலைமையகத்திற்கு சென்று சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்த சந்திப்புகளின் பின்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளா சிறில் ஹேரத் ஆகியோரை சந்தித்தா.

இன்று அனுராத புரத்திற்கு விஜயம செய்யவிருக்கும் இவர் வவுனியாவிலுள்ள வன்னி பிராந்திய இராணுவத் தலைமையகத்திற்கும் விஜயம் செய்கின்றார்.

இந்தியாவில் ஆறு இராணுவப் படைப்பிரிவின் சுமார் 18 லட்சம் படை களுக்கு இவா தலைமை தாங்குவது குறிப்பிடத்தக்கது. (க)

# ஸ்ரீ.சு. கட்சியின் செயலாளராக அமைச்சர் மங்கள சமரவீர?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக அமைச்சர் மங்கள சமரவீரவை நியமிப்பதற்கு திரை மறைவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

தற்போதைய செயலாளரான அமைசசர் மைத்திரி பால சிறிசேன மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் பிரதமர் மகிந்த ராஜபகஷவுடன் அமைச்சர் மைத்திரி பால சிறிசேன நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் அவரைக் கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து நீக்கி விட்டு, அமைச்சர் மங்கள சமர வீரவை அந்தப்பதவிக்கு நியமிக்க அக்கட்சியில் உள்ள சிலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே அவருக்கு நெருக்கமான மைத்திர பால சிறிசேனவை கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்க மானவரான மங்கள சமர வீரவை இப்பதவிக்கு நியமிப்பதற்கு உத்தேசிக்கப்படடு வருவதாக கட்சி வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (க-121)

## கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவராக இருந்து 2003/2004 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மற்றும் இக்காலப் பகுதியில் 25 வருடகால சேவையைப் பூர்த்திசெய்தவர்கள ஆகியோரைப்பாராட்டிக்கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஊழியர் சங்கத் தலைவர் சி.தஙகராஜா தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்பல்கலைக் கழக உபவேந்தரும், கௌரவ விருத்தினர்களாக படாதிபதிகளும் சிறப்பு விருந்தினராக துறைத்தலைவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ந-5)

## ஹிந்தி நடிகர் ஷாருக்கான் இலங்கை வரவுள்ளார்

(கொழும்பு)

ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வலையமைப்பின விசேட கலை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக பிரபல ஹிந்தி நடிகா ஷாருக்கான் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடுப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுளளார்.

இவர் இதற்கு முன்னர் அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பா என உலகளாவிய ரீதியில் இவ்வாறான 22 நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளார்.

இவருடன் ராணி முகர்ஜி, சாய்வ் அலிகான், பிரிந்தீவ் சிந்தா,ரசீனா செட்டி உட்பட பல முன்னணி இந்திய நட்சத்திரங்களும் முதற் தடவையாக இலங்கைக்கு வர உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-121)



எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப் பகுதி அரசியல்துறை உறுப்பினர் நா. ஈழமாறன் மங்கள விளக்கேற்றுவதையும் வித்தியாலய அதிபர் தி. சிவபாலன் ஆகியோருடன் ஆசிரியர்கள், மாணவர்களையும் படத்தில் காணலாம். (படங்கள்:ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)

## இன்று ஒரு தகவல்

# மூளை ஆராய்ச்சி

ஒருவர் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். "ஏன் கவலைப்படுகின்றீர்கள்? என்று கேட்டார்" இன்னொருவர் "கடன் கொடுத்தேன் ஒருவருக்கு அதனால் தான் கவலைப்படுகிறேன்" என்றார்." ஆச்சரியமாக இருக்கிறதே" என்றார். அடுத்தவர் இதில் என்ன சார் ஆச்சரியம... இந்தக்காலத்தில் கடன் கொடுத்தவன தான் கவலைப்பட வேண்டும். வாங்கியவனா கவலைப்படுவான்? என்றார். இவர் சர்வ சாதாரணமாக

இந்த உலகத்தில் எதைவேண்டுமானாலும் கடன் கொடுக்கலாம் ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் கடன் கொடுக்கக்கூடாது என்று சொல்வார்கள் எதைத்தெரியுமா? புத்தியை! ஆனால்... விஞ்ஞானம் போகும் வேகத்தைப் பார்த்தால் இனிமேல் அதையும் கடன் கொடுக்கலாம் போல் தெரிகிறது.

ஆமாம்! யாராவது நம்மிடம் வந்து சார்! உங்கள் மூளையில் கொஞ்சத்தை எடுத்துக் கொள்ளவா? என்று கேட்டால் ஓ!.... தாராளமாக எடுத்துக்கொள்ளுங்களே என்று கூறிவிடலாம்போல் உள்ளது. அப்படி யாரும் நம்மிடம் வந்து அவ்வளவு பிரியமாக கேட்டுவிட மாட்டார்கள். அது வேறு விஷயம் நான் சொல்லவந்தது என்னவென்றால் ரஷ்யாவில் சில டாக்டர்கள் சேர்ந்து ஓர் ஆராய்ச்சி நடத்தினார்கள்.

மூளையைப் பற்றி ஓர் ஆராய்ச்சி எப்படிச் செய்தார்கள் தெரியுமா? முதலில் ஒரு முயல் குட்டியைப் பிடித்தார்கள் அதற்கு வயது என்ன தெரியுமா? 30 நாள். மூளையில **Cortex** என்று ஒரு பகுதி இருக்கிறது. அதாவது மூளையின வெளிப்பரப்பு அது. இந்த முயல் குட்டியின் தலையில் ஒரு சத்திர சிகிச்சை நடந்தது. அதன் மூளையில் உள்ள **Cortex** பகுதியை சத்திர சிகிச்சை மூலம தனியாக எடுத்து விட்டனர்.

அதன் பின் அந்த முயல் குட்டியை ஒரு வருடத்திற்கு வழக்கம் போல எல்லாம் கொடுத்து வளர்த்தனர். அந்த முயலும் எந்தப் பாதிப்பும் இன்றி வளர்ந்து கொண்டு வந்தது. ஒருவருடம் கழித்து மீண்டும் ஒரு சத்திர சிகிசசை நடந்தது. மண்டை ஓட்டைத் திறந்து பார்த்தால் ஓரே ஆச்சரியம் ஏற்கனவே அந்த **Cortex** பகுதியை அதாவது மூளையின் வெளிப் பகுதியை எடுத்திருந்தனர் அல்லவா? அந்தப் பகுதி மீண்டும் முன்பிருந்தது போலவே வளர்ந்து விட்டது.

இதிலிருந்து என்ன தெரிகிறது? மூளையில் ஒரு பகுதியை எடுத்துவிட்டால் மீண்டும் அது வளர்ந்து விடும் என்று தெரிகிறது. இந்த ஆராய்ச்சி நமக்கு மிகவும் உபயோகப்படும். சிலருக்குக் கடுமையான தலைககாயம் ஏற்படலாம். அந்த சமயத்தில் மூளையில் பாதிப்பு ஏற்படும். அதற்குப் புதிய முறையில் சிகிச்சைகள் கொடுப்பதற்கு இந்த ஆராய்ச்சி உபயோகமாக இருக்கும்.

மேடையில் பேசிய ஒருவர் ஒரு கதை சொன்னார். ஒரு இடத்தில் பல தேசத்து மனிதர்களுடைய மூளைகளையெல்லாம் போத்தல்களில் அடைத்து விற்றுக கொண்டிருந்தார்களாம். ஒருவர் அங்கே போய விசாரித்துக் கொண்டிருகின்றார். அவர் நமது ஊரைச் சேர்ந்தவர். இது இந்ததேசத்து மூளை இதன விலை 10 டொலர். இது இந்த நாட்டு மூளை. இதன் விலை 5 டொலர் என்று சொல்லிக் கொண்டே போனார்களாம்.

ஒரு போத்தலில் இருந்த மூளைக்கு மட்டும் விலை ஆயிரம் டொலர் என்று போட்டிருந்தது. இது எந்த ஊர் மூளை என்று கேட்டிருக்கிறார். 'இது உங்கள் ஊர் மூளை' என்று சொல்லியிருக்கிறாகள் அங்கிருந்தவர்கள்.நமது ஆளுக்கு ஒரே ஆசசரியம்! என்ன இது? எங்கள் ஊர் மூளைக்கு மட்டும் ஏன் இவ்வளவு விலை? என்று கேட்டார். அதற்கு கடைக்காரர் சொன்னாராம் அதிகமாக உபயோகப்படுத்தாத மூளை உங்கள் ஊர் மூளை அதனால் விலை அதிகம் என்றாராம்.

அதனால் நமது மூளைக்கு எங்கு போனாலும் மதிப்பு அதிகம் தான். பெருமைப்பட வேண்டிய விஷயம் மூளையில் கொஞ்சம் போனால் கூட மீண்டும் வளர்ந்து விடும். என்று வேறு தெரிந்து கொணடோம். வீட்டில் கோபித்துக்கொண்டு சுவற்றில் மோதிக்கொள்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தோம். இனி உண்மையில் மோதிக் கொள்ளலாம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க ஜனாதிபதிக்கு ஆர்வம் அதிகம்

## கூறுகிறார் அகாஷி



(கிளிநொச்சி)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு உண்மையான நம்பிக்கையும் ஈடுபாடும் காணப்படுகின்றது.

இதனை அண்மையில் ஜனாதிபதி சந்திரிகாவுடன் நான் மேற்கொண்ட கலந்துரையாடலில் உன்னிப்பாக அவதானித்தாக ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த இரண்டரை ஆண்டுகளாக கட்டியெழுப்பப்பட்ட சமாதானத்தின் முழுமையான பலன்களை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

இதனை நடைமுறைப்படுத்த இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதனை இருதரப்பும் கவனத்தில் எடுத்து செயற்படுத்த வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட இருதரப்பினரின் ஒத்துழைட் போடும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமடையும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

அண்மையில் ஜனாதிபதியின் கருத்துக்களை விடுதலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்தினோம்.ஆனால்இடை நிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் எப்போது மீண்டும் ஆரம்பமாகும் என்று எனக்குத் தெரியாது. சமாதான அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர். அவர்களுக்கு தமது சநதிப்புக்கள் குறித்து தெளிவாக விளங்கப்படுத்தவுள்ளோம்.

அதன் பின்னர் விரைவில சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அதற்கு எமது ஆதரவு எப்போதும் உண்டு என்று அகாஷி மேலும் தெரிவித்தார். (இ-121)

# டிலானின் குற்றச் சாட்டுகளுக்கு விமல் கடுமையாக மறுப்பு



(கொழும்பு)

தனது உரை குறித்து தெளிவாக விளங்கிக் கொள்ளமால், ஜனாதபதிக்கு அவதூறு ஏற்படுத்துவதாக தன் மீது பிரதியமைச்சர் டிலான் பெரேரா குற்றம் சாட்டுவதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும்,பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் டிலான் பெரேராவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையின் அதிகாரங்களை ஜனாதிபதி உரிய முறையில் பயன்படுத்தாமல் இருந்ததைக் குறிப்பிடுவதற்காகவே ஜனாதிபதியின சரீர இயல்புகள் குறித்துக் கருத்து வெளியிடப்பட்டது. என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதியைப் பற்றி விமல்வீரவன்ச தெரிவித்த கருத்துத் தொடர்பாகத் தமது அமைப்புக் கவலையடைந்துள்ளதாக பிரதியமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பின் தலைவர் என்ற வகையிலேயே தான் இவ்வாறு தெரிவித்தாக பிரதியமைச்சர் டிலான் பெரேரா குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதிக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதாக பிரதியமைச்சர்களாலும் பாராளுமன்ற உறுப்பனர்களாலும் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் கூட்டு அமைப்பினால் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் தவறான வழிநடத்தலின் பேரிலேயே இடம் பெற்றுள்ளதாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இவ்வமைப்பின் தலைவர் என்ற வகையில் பிரதியமைச்சர் டிலான் பெரேரா இது குறித்து கவலை தெரிவித்து ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டமையானது தவறானது. ஜனாதிபதியின் சரீர இயல்பு தொடர்பாக தெரிவித்த கருத்து அவருக்கு அவதூறு ஏற்படுத்துவதற்காக அல்ல. அத்துடன் டிலான் பெரேரா தலைமை வகிக்கும் இவ்வமைப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மாத்திரம் மட்டுப் படுத்தப்பட்ட ஒன்றா? அல்லது ஐக்கிய மக்கள் சுதநதிரக்கூட்டமைப்புக்கு பொதுவான ஒன்றா? என்றும் விமல் வீரவன்ச அக் கடிதத்தின் மூலமாக கேள்வி எழுப்பியுள்ளார். (ஞ-121)

## இராசி பலன்

**03.11.2004**
**(ஐப்பசி 18, புதன்கிழமை)**
**ஷஷ்டி மு.இ 6.23 மணிவரை**
**புநர்பூசம் பி.ப 02.28 மணிவரை**
**இராகுகாலம் 12.04- 01.34 மணிவரை**
**சுபநேரம் 04.34-06.04 மணிவரை**
**கௌரி விரதம் 12ஆம் நாள்**

**மேடம்** *தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்கை, ஜனவசியம், கலந்துரையாடல்.*

**இடபம்** *அதிக செலவு, வேலைப்பளு, கோபப்படுதல், முயற்சி தாமதம்.*

**மிதுனம்** *தொழில் சிந்தை, நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு, கற்பனை மிகுதி.*

**கடகம்** *காரியஅலைச்சல், வீண்செலவு, உறவினர் வெறுப்பு, வேலைப்பளு.*

**சிங்கம்** *உற்சாகம், காரிய அனுகூலம், பொருள் வரவு, புதியபொருள் சேர்கை,*

**கன்னி** *மேன்மை, பிறர் உதவி, தொழில் நன்மை, காரிய சித்தி.*

**துலாம்** *சரீரபிரயாசை, புதிய திட்டமிடல், பிதா சிந்தை, முயற்சி தாமதம்.*

**விருச்சிகம்** *அமைதிக் குறைவு, பிரயாணபயம், ஆரோக்கிய குறைவு, திடீர் நன்மை,*

**தனுசு** *செல்வாக்கு, அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், தனவரவு.*

**மகரம்** *ஆரோக்கியம், தொழில் நன்மை பகைவர் நேசம், முயற்சி கைகூடும்.*

**கும்பம்** *குடும்பக்கவலை, உடல்நலக் குறைவு, முயற்சி தாமதம், பண விரயம்.*

**மீனம்** *மாதா சுகம், ரோகநிலை, முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம்.*

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்**

# காத்தான் குடி இரும்புத்தைக்கா பள்ளிவாசல் மீது கிரனைட் வீச்சு

## 15ற்க்கும் மேற்பட்டோர் காயம்

(மட்டக்களப்பு )

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் இஸ்லாமிய மதப் பிரிவினரிடையே மீண்டும் நேற்று முன்தினம் வன்முறை வெடித்துள்ளது. இதன் காரணமாக 15இற்கும் மேற்பட்டவாகள் கிரனைட் வீச்சில் காயமடைந்து காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

காததான்குடி4 இல் உள்ள இரும்புத் தைக்கா பள்ளிவாசல் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தொியாத நபாகளினால் கிரனைட் வீசப்பட்ட சம்பவத்தையடுத்தே மீண்டும் வன்முறைவெடித்துள்ளது.

இச் சம்பவத்தையடுத்து ஆத்திரமடைந்த ஜாமியத்துல் உலமா சபையின் கோட்பாட்டை பின்பற்றும் முஸ்லிம்கள் அப்துல் ரவூப் மௌலவியின் அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவைகுாிய முசு மௌலானா, கபுறடியை தீ வைத்து எாித்துள்ளாாகள். இதனையடுத்தே மண்டும் பதட்ட நிலை உருவாகியுள்ளது.

இரு தரப்பு பள்ளிவாசல்களிலும் ஒலிபெருக்கிகளில் விடுக்கப்படட அறிவிப்புககளையடுத்து முஸ்லிம்கள் தத்தமது பள்ளிவாசல்களில் தற்போது கூடியிருக்கின்றாாகள். பொது இடஙகளில கூட்டம் கூட்டமாக நின்று வன்முறைகளைத் தூண்டி விடும் வகையில் செயல்பட்டவர்கள் பொலிஸாரினால் தடியடிப் பிரயோகம் மற்றும் கண்ணீர் புகையடித்து கலைக்கப்பட்டுள்ளார்கள்.

தங்கள் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட இந்த கிரனைட தாக்குதலுக்கு அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவையே பொறுப்பு என ஜாமியத்துல் - உலமா சபை குற்றம் சுமத்தியுள்ளது. இச்சம்பவத்தையடுத்து, மேலதிக பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் அங்கு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும்,வன்முறைகள் வெடித்துள்ளது.

இதேவேளை,அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவையின் மதக் கோட்பாட்டை பின்பற்றுபவாகள் வசிக்கும் காத்தான் குடி-6 பிரதேசத்தில் மின்சாரம் அணைக்கப்பட்டு, மக்கள் இருளில் இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றார்கள். அவர்களுடய பள்ளிவாசல் ஒலி பெருக்கியில் மாற்று மதப் பிரிவினருக்கு எச்சாிக்கை விடுக்கும் வகையில் அறிவிப்புகளும் வெளியாகியுள்ளது.

தைக்கா பள்ளி வாசல் மீதான தாக்குதல் சம்பவத்திற்கும் எங்களுக்கும் தொடாபுகள் இல்லை. இது ஒரு சதி நாசவேலை. உங்கள் பிரதேசத்தில் ஆங்காங்கே வசிக்கும் எமது சகோதரர்களுக்கு ஏதாவது நடக்குமானால் எமது பள்ளிவாசலுக்கு அருகில உங்கள் ஆட்கள் வசிக்கின்றார்கள் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகின்றோம் என அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-121)



# கொழும்புக் கம்பன்கழகம் நடாத்தும்

# ஸ்ரீ ராம நாம கானாமிர்தம்

# இசைவேள்வி-2004

கொழும்புக்கம்பன் கழகம் ஆண்டு தோறும் நடாத்தி வரும் முத்தமிழ விழாக்களின் வரிசையில் 2004

**நவம்பர் 6 முதல் 13ஆம் திகதிவரை நம்நாட்டுக் கலைஞர்களும், எட்டு பிரபல இந்தியக் கலைஞர்களும் பங்கேற்கின்றனர்.**

ஆம் ஆண்டுக்கான "ஸ்ரீராமநாம கானாமிர்தம்" என்னும் பெயரிலான இசைவேள்வி எதிர்வரும் நவம்பா மாதம் 6 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையிலான எட்டு நாட்க ளும் மிகச்சிறப்பான முறையில் நடாத்தப்பட ஒழுங்கு செய்யப்பட் டுள்ளது. கொழும்பு வெள்ள





வத்தை ராமகிருஷ்ண மிஷன் மண் டபத்தில் தினமும் மாலை 5 மணி தொடக்கம் இவ்விழாநிகழ்ச் சிகள் நடைபெறவுள்ளன. இந்த இசை வேள்வியினை கொழும்புக் கம்பன் கழக உபதலைவரும் ஜனா திபதியின் முன்னாள் செயலாளரு மான திரு. சு. சிவதாசன் தம்பதி யினர் மங்கல விளக்கேற்றியும், கொழும்புக் கம்பன் கழகத் தலை வர் தொழிலதிபர் தெ. ஈஸ்வரன் அவர்கள் தொடக்கவுரையாற்றியும் 6 ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

ஈழத்தின் பிரபல மூத்த நாதஸ் வர இசைக்கலைஞரான திரு. எம் பஞ்சாபிகேஷனும் அவரது புதல்வர் எம்.பி.நாகேந்திரன் ஆகியோரின் மங்கல இசை நிகழ்ச்சியுடன் ஆரம் பமாகும். இவ் விழாவில் ஈழத்தின மூத்த இளைய இசைக்கலைஞர் களும் தமிழகத்தின் பிரபல இசைக கலைஞர்களும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

தமிழகத்திலிருந்து திருமதி சுதா ரகுநாதன், திருமதி குலபூசனி கல் யாணராமன், திருமதி ஜெயஸ்ரீ ஸ்ரீநாத (பம்பாய் ஜெயஸ்ரீ), நெய்வேலி சந் தான கோபாலன், ஓ.எஸ்.தியாக ராஜன், ரி.வி.சங்கரநாராயணன், திருச்சூர் இராமச்சந்திரன், மதுரை ரி.என்.சேஷகோபாலன் முதலியோர இவ் விழாவில் இவ்வாண்டு பங் கேற்கின்றனர்.




நம் நாட்டைச்சார்ந்த மூத்த இசைக்கலைஞர் எம்.ஸ்ரீரங்கநாத னும், இளைய கலைஞர்களான அகிலன், திருமதி சாரதா சச்சி தானந்தம், திருமதி மீனாட்சி வெங் கடேசன், திருமதி சங்கீதா கோகுலன், செல்வி அபர்ணா அருணாசலம், திருமதி பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன், செல்வி தர்ஷினி கேதீஸ்வரன் ஆகி யோரும் இவ்விழா நிகழ்ச்சிகளில பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.





தமிழ் மரபிசை நம் நாட்டிலும் பல்லாயிரமாண்டு காலமாகப் பயி லப்பட்டு வருகிறது. ஈழத்தின் இசைப புலவர்கள் பற்றிய செய்தி கள், திருவிளையாடல் புராணம், இராமாயணம், போன்ற பல பழைய இலக்கியங்களில் பதிவாகியுள் ளன. இராமாயணக் கதாபாத்திர மான இலங்கை மன்னன் இராவணன் இசை வல்லாளனாய்த் திகழ்ந்தான என்று பல நூல்களும் கூறுகின்றன.





இசைவாத்தியமான வீணையைத் தன் கொடியாய்க் கொண்டிருந் தான் என்றும் சாமக்கீதம் இசைத்து இறைவனிடம் வரம் பெற்றான் என்றும், அகத்திய முனிவருடன் இசைப்போட்டியில் ஈடுபட்டான் என் றும் இராவணண் பற்றி பல கதை கள் சொல்லப்படுகின்றன.

இக் கதைகளால் ஈழத்தின் தொன்மை மிக்க இசைமரபு தெரிய வருகிறது. இம் மரபினை கடந்த இரண்டு நூற்றாண்டுகளிலும் கூட மிகப் பெரிய இசை மேதைகள் தொடர்ந்து கடைப்பிடித்தனர். தமி ழகத்தாரும் தலை வணங்கும்படி வாழ்ந்த நம் தவில் மேதை தெட் சணாமூர்த்தியின் பெயர் இன்றும் தமிழ் நாட்டில் பேசப்படுகிறது. நம நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குச் சென்று இசை பயின்று வந்த பல



அறிஞாகள் இம் மண்ணில் இசைப் பயிரைச் சிறப்புற வளர்த்தெடுத்தனர்.

இவ்விசை மரபினை தொடர்ந்து. பேணவும் மேலும் வளர்த்தெடுக் கவும் எமது கொழும்புக் கம்பன் கழகம் முயன்று வருகின்றது. ஒரு காலத்தில் ஈழத்தில் இருந்து பெருமளவிலான வசதிபடைத்த இசையார்வலர்களும, இசைக்கலை





ஞர்களும், தமிழகத் தலைநகரான சென்னையில் ஒவ்வோர் ஆண் டும் மார்கழி மாதத்தில் நடை பெறும் இசை விழாக்களை காணச் செல்வது வழக்கமாய் இருந்தது. வசதியற்ற திறமை மிகுந்த பல கலைஞர்களுக்கு இவ்வாய்ப்பு எட் டாக்கனியாகவே இருந்து வந்தது. வானொலி மூலமோ வேறு ஊடகங்





களின் மூலமோ அக் கச்சேரிகளில் ஒருசில பகுதிகளை மாத்திரம் கேட் கும் வாய்ப்பினையே அவர்களால் பெறமுடிந்தது. நம் மண்ணில் வாழும் இசைத்துறை சார்ந்த அனைவருக் கும் ஒருதரமாவது மார்கழி மாதத் தில் இசைவிழாவைக்காண சென்னை சென்று வரவேண்டும் என்பது இலட சியக் கனவாகவே இருந்தது.

ஆயிரக்கணக்கான அவ்விசை இரசிகாகளின் கனவை நனவாக கும் நோக்குடன் எமது கொழும்புக் கம்பன்கழகம் ஒவ்வொரு நவம்பர் மாதத்திலும் இலங்கைத் தலைநக ரில் சென்னை இசை விழாககளுக் குச் சமமான முறையில் மிகப் பெருமளவில் கடந்த சில ஆண்டுகளாக "ஸ்ரீராமநாமகானாமிர்தம்" என்னும் பெயரிலான இசை வேள்வியை நடாத்தி வருகிறது. ஈழத்தின் நவம பர் மாத இசை வேள்வியைக் காண தற்போது வெளிநாட்டில் இருந்தும் பார்வையாளர்கள் வரத் தொடங்கி யிருப்பது குறிப்பிடத்தக்க ஓர் வளர்ச சியாகும்.

ஆரம்ப காலத்தில் இவ்விசை





வேள்வியில் ஒருசில இந்தியக் கலைஞர்களே பங்கேற்றனர். பங் கேற்ற அவ்விசைக் கலைஞர்கள் நம் இசை இரசிகர்களின் ஆர்வத் தினையும், இங்கு நடைபெறும் இசை வேள்வியின் சிறப்பினையும், தமிழ கத்தின் மற்றைய கலைஞர்களுக் கும் எடுத்துச் சொன்னதால இன்று தமிழகத்தின் பல பிரபல இசைக் கலைஞர்களும் இவ்விசை விழாவில் கலந்துகொள்ளத் தாமாக மனமுவந்து முன்வருகின்றனர். கொழும்பு இசை வேள்வியில் கலந்து கொள்வதை ஓர் கௌரவமாய் கருதும் மனநிலை தமிழகத்தில் பரவியிருப்பது நம் ஈழ இசை உலகிற்கு கிடைத்த ஓர் மிகப்பெரும் வெற்றியே!.





அவ்வடிப்படையில் இவ்வாண்டு தமிழகத்தின் மிகப் பிரபலமான எட்டு இசைக் கலைஞர்கள் விழா வில் பங்கேற்கின்றனர். தினமும் விழா நிகழ்ச்சிகளில் ஒரு ஈழத்து இசைக் கலைஞரின் கச்சேரியும், ஒரு தமிழக இசைக் கலைஞரின் கசசேரியும் நடைபெறவுள்ளது. அத னோடு மாணவர்களின் இசைத் துறை அறிவு வளர்ச்சி நோக்கி, இந்திய அரசால் இவ்வாண்டு "பத்ம வபூஷன்" பட்டமளித்து கௌரவ விக்



கப்பட்ட மதுரை ரிஎன்சேஷகோபாலன் பங்கேற்கும் கருத்தரங்கு நிகழ்ச்சி ஒன்றும் விழாவின் நிறைவு நாளான 13ஆம திகதி சனிக்கிழமை காலை இராமகிருஷ்ணமிஷன் கருத்த ரங்கு மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஈழத்தின் பிரபல இசைக் கலைஞர் கலாசூரி





அருந்ததி ஸ்ரீரங்கநாதன் தலைமை யில் நடைபெறும் இக் கருத்தரங் கில் சேஷ கோபாலன் "சங்கீத சாகரன்" எனும பொருளில் உரை நிகழ்த்தவுள்ளார். உரை நிகழ்த்து வதோடு இசை மாணவர்களின் ஐயங் களையும் தீர்த்து வைக்கவுள்ளார்.

இவ்வாண்டு இசைவேள்வியில் டாக்டர் எஸ்.கே.மகேஸ்வரன், தஞ் சாவூர் பல்கலைக்கழகப் பேராசிரி யர் திருமதி ஞானா குலேந்திரன், அபபலோ வைத்தியசாலை, வைத் திய நிபுணர் ச.சாண்டில்யா, முன்னாள சுங்கத்திணைக்கள ஆணையாளர் ரி.கணநாதலிங்கம், யுனைற்றட் பார் ஷல் சேவிஸ் பணிப்பாளா ஏ.கந்த சாமி, லண்டனில் வதியும் புகழ்பூத்த வைத்திய நிபுணர் சீ.நவரத்தினம், வித்துவான் வசந்தா வைத்தியநாதன, சிலிங்கோ நிறுவனப் பணிப்பாளர் செல்வி மாலா சபாரட்ணம் ஆகியோர் தினமும் தொடக்கவுரையாற்றவுள் ளனர். ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி.ஞானசேகரன, எஸ்.ஹரிகரன், புதிய கதிரேசன் ஆலய அறங்காவலர் எஸ்சுப்பிரமணியம் செட்டியார், யுனி ஆர்ட்ஸ் அச்சக உரிமையாளர் பொ.விம லேந்திரன், வீரகேசரி நிர்வாக இயக குநா குமார் நடேசன், சுங்கத்திணைக களப் பணிப்பாளர் எஸ்.இராமச்சந் திரன், எழுத்தாளர் எம்.சோமகாந்தன தம்பதியினர்கள் தினமும் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

இவ்விழா நிகழ்ச்சிகள் அனைத் தும் எதுவித கட்டணமும் இன்றி இலவசமாகவே நடாத்தப்படுகின் றது. கழகத்தின் இத்தகு முயற்சி களை நிதி மிகுந்த தாழ்விலாச் செல்வர்கள் ஊக்குவித்து அருள வேண்டும் எனவும், வழமைபோலவே விழா நிகழ்ச்சிகளில் குறித்த நேரத் தில் கலந்துகொண்டு இவ்விசை வேள்வியால் பயன்கொள்ள வேண் டும் எனவும் கொழும்புக் கம்பன் கழகம் அனைவரையும் கேட்டுக் கொள்கிறது. □



# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை -2004


## சமூகக்கல்வியும் வரலாறும் பகுதி II

நேரம்: 3மணி

ஆக்கம்: யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.

**1ம் வினாவின் ''அ'' பிரிவிற்கும் ''ஆ'' பிரிவிற்கும் வேறு 5 வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. தரப்பட்டுள்ள 1:50,000 தேசப்படத்தை அவதானித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. விடை எழுதுவதற்கு வழங்கப்பட்டுள்ள தாளைப் பயன்படுத்துக. இத்தாளை உமது விடைத்தாளுடன் இணைத்துக் கொள்க.



**1:50,000**

**அ) சரியான விடைகளைத் தெரிவு செய்க.**

1)மேற்கெல்லையில் ஆரம்பித்து வடக்குத் தெற்காகச் செல்லும் எல்லை
  i)மாகாண எல்லை ii)மாவட்ட எல்லை
  iii)கிராமசேவகர் பிரிவு எல்லை iv)பிரதேச செயலர் பிரிவு எல்லை

2)இப்பிரதேசத்தின் ஊடகப் பாயும் நதி
  i)குமுக்கன் ஓயா ii)கலா ஓயா
  iii)கிரிந்தி ஓயா iv)கரடியனாறு

3)இப்பிரதேசத்தின் அதிகூடிய உயரம்
  i)500m ற்கு மேற்பட்டது ii)600m ற்கு மேற்பட்டது
  iii)800m ற்கு மேற்பட்டது iv)1200m ற்கு மேற்பட்டது


4)இப்பிரதேசத்தின் ஆறு வடிகாலமைப்பின் வடிவம்
  i)ஆரை வடிகால் ii)கங்கண வடிகால்
  iii)அளியடைப்பு வடிகால் iv)மரநிகர் வடிகால்


5)இப்பிரதேசத்தின் ஊடாகச் செல்லும் வீதி இல
  i) A1 ii) A2 iii) A3 iv) A4

02. 1)இப்பிரதேசத்தின் நெற்செய்கைக்கு சாதகமாக அமைந்துள்ள 2 காரணிகளைக் குறிப்பிடுக.
  2)இப்பிரதேசத்தின் 3 பயிர்செய்கைகள் தருக.
  3)இப்பிரதேசம் எத்திசையை நோக்கி சரிந்து செல்கிறது?
  4)இப்பிரதேசதன் பாறைகள் குத்துச்சாயவாகக காணப்படும் பகுதி எது?


03. 1)வடக்குத் தெற்காகச் செல்லும் வீதியின் நீளம் எவ்வளவு?
  2)Aஎனக் குறிப்பிடப்பட்டுள்ள தரைத்தோற்றம் என்ன?
  3)புராதனக் களக்குடியிருப்பு கண்டுபிடிககபபட்ட இடத்தன் பெயர் தருக.
  4)இப்பிரதேசத்தின் கிழக்கிலிருந்து மேற்காகச் செல்லும் ஒருவர் பாலத்தைக் கடப்பதற்கு எததனை கிலோமீற்றர் தூரம செல்ல வேண்டும?

ஆ) 01. **1-10 வரையான இலக்கங்களைக் குறிக்கும் படங்களுக்குரிய பெயர்களைத் தருக.**






















02. ஜப்பான், நோர்வே, பாகிஸ்தான், ஜேர்மனி, சீனா, இந்தியா
  1)மேலே குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் 3ஐக் குறிப்பிடுக.
  2)அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பொது இயல்புகள் 4ஐக் குறிப்பிடுக.
  3)குவைத், ஈரான், ஈராக் போன்ற நாடுச கூடுதலான ஆள்வீத வருமானத்தைப் பெறுகின்றபோதிலும் அவை அபிவிருத்தி அடைந்த நாடாகக் கருதப்படாமைப்பு 5 காரணிகளைத் தருக.
  4)அபிவிருத்தி அடைந்த நாடுகள் எதிர்நோக்கும் 4 பிரச்சினைகளைக் கூறி 2ஐ விளக்குக.

03.
  1)**A1-A35**வரையான பெருந்தெருக்கள் உள்ளன. இவற்றுள் 3 இலக்கங்கள் தரப்பட்டுள்ளன. வீதிகளின் பெயர்களைத் தருக.
  **A1 A9 A35**
  2)**A9** பாதையின் பாவனையால் ஏற்பட்டுள்ள 4 நன்மைகள் தருக.
  3)வீதிவிபத்துக்கள் இடம்பெறுவதற்கான காரணிகள் 5ஐக் குறிப்பிடுக.
  4)எமது நாட்டின் சக்தி நுகர்வு அதிகரித்துச் செல்வதற்கு ஏதுவாகவுள்ள காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றைத் தடுக்கும் வழிமுறைகள் 2 ஐத் தருக.

04.
  1)மலையக இராச்சியத்தில் காணப்பட்ட காணி உரிமைகள் 3 தருக.
  2)போர்த்துக்கேயரின் செல்வாக்கைப் பிரதிபலிக்கும் வகையில் இன்றும் சமூகத்தில் காணும் 2 விடயங்களைக் குறிப்பிடுக.
  3)போர்த்துக்கேய ஆட்சியாளர்களைப் போலவே ஒல்லாந்த ஆட்சியாளர்களும் மத்திய மலைநாட்டைக் கைப்பற்ற முடியாமல் போனமைக்கான 2 காரணிகளை விளக்குக.
  4)பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுவதிலும் திருகோணமலைத் துறைமுகத்தைக் கைப்பற்றுவதிலும் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை விபரிக்குக.

(08 ஆம் பக்கம் பார்க்க......)

# முதலமைச்சர் ஜெயலலிதா பதவி விலக வேண்டும்

"பை பையாய் பொன் கொண்டோர்
பொய் பொய்யாய் சொன்னாலும்
மெய் மெய்யாய் போகுமடி - குதம்பாய்
மெய் மெய்யாய் போகுமடி"

என்பதை நம்பி ஆளுநர் இடமாற்றப் பிரச்சினையில் ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்ட தமிழக முதல்வர் ஜெயலலிதா, புத்திசாதுரியத்துடன் செயற்படுவதாக நினைத்து உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேலுடன் நடைபெற்ற தொலைபேசி உரையாடலைப் பதிவு செய்து உச்ச நீதிமன்றத்தில் ஆளுநர் இடமாற்றம் தொடர்பாக தமிழக அரசு தாக்கல் செய்த வழக்குக்குச் சாட்சியமாகச் சமர்ப்பித்தது இவ்விதம் தனக்கு எதிராகப் பூதாகாரமாக உருவெடுக்கும் என்று சிறிதும் எதிர்பார்த்திருக்கமாட்டார்.

பணபலம், பதவி அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டு எதையும் சாதித்து விடலாம் என்ற முனைபபுடன் செயற்பட்ட ஜெயலலீதா இன்று மூக்குடைபட்ட நிலையில் நாலாபுறங்களிலுமிருந்து வீசப்படும் கண்டனக் கணைகளுக்கு எதிர்நிற்க முடியாமல் தத்தளித்துக்கொண்டிருககிறார்.

"நான் அமைச்சருடன் நடைபெற்ற தொலைபேசி உரையாடலைப் பதிவுசெய்யவில்லை; ஞாபக்ததில் இருந்துதான் தொகுத்தேன்" எனத் தனது செயலை நியாயப்படுத்த முயனற முதல்வருக்கு, தி.மு.க. தலைவர் கருணாநிதி தகுந்த பதில் அளித்திருக்கிறார்.

"ஞாபகத்தில் இருந்து தொகுத்ததாக இருந்தால் மத்திய அமைச்சருடைய கருத்தை மட்டும் எழுதமுடியுமே தவிர உரையாடல் முழுவதையும் அப்படியே வரிக்கு வரி கூறுவது இயலாத காரியம்" எனச் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருணாநிதி, மத்திய உள்துறை அமைச்சருடன் நடைபெற்ற உரையாடலைப் பதிவு செய்யவில்லை என்று ஜெயலலிதா கூறுவதை யாரும் நம்பமாட்டார்கள் என்று கூறியதுடன் டான்சி நிலம் வாங்கிய பிரச்சினையில் கூட பத்திரத்தில் கையெழுத்து இட்டுவிட்டு, பின் அது தன் கையெழுத்து அல்ல என்று கூறியதைக் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தி.மு.க. தன் சொற்படி நடக்கக் கூடிய ஒரு ஆளுநரையே விரும்புகிறது எனத் தமிழக அரசின் தலைமைச் செயலர் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்தது பற்றிய கேள்வியொன்றுக்குக் கருணாநிதி பதிலளிக்கையில், தலைமைச் செயலரின் திறமைக்கும் நேர்மைக்கும் பாராட்டுத் தெரிவித்ததுடன், ஜெயலலிதாவின் இராச்சியத்தில் அவர் இட்ட கட்டளையை நிறைவேற்றினால்தான் பதவி நிலைக்கும் என்ற நிலை ஏற்படும்போது இரும்புத் தூணும் வளைந்துவிடும் என நகைச் சுவையுடன் கூறியிருக்கிறார்.



இப்பிரச்சினையில் இதுவரை மௌனம் சாதித்துவந்த காங்கிரஸ் கட்சி இப்பொழுது மெதுவாக வாய்திறக்க ஆரம்பித்திருக்கிறது. டெல்லியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த காங்கிரஸ் கட்சியின செய்தித் தொடர்பாளர் ஜெயலலிதாவின் நடவடிக்கை அப்பட்டமான உரிமைமீறல் எனக் குறிப்பிட்டுள்ளது காங்கிரஸ் கட்சியின் கருத்து என்பதை அனைவரும் அறிவர்.

ஜெயலலிதாவின் செயலுக்காகத் தமிழக அரசுமீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்க மறுத்த செய்தித் தொடர்பாளர், மத்திய உள்துறை அமைச்சருடனான தொலைபேசி உரையாடலை ஜெயலலிதா எந்தவிதத்திலும் பகிரங்கப்படுத்தியிருக்கக்கூடாது என்று குறிப்பிட்டிருப்பதை அர்த்தபுஷ்டியானதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

## உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனுதாக்கல்

இதற்கிடையில், பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்குன்றத்தைச் சேர்ந்த உதயசூரியன் என்பவர் உயர்நீதிமன்றத்தில் பொதுநலமனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார். அதில் ஆளுநர் மாறறம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கில் மத்திய உள்துறை அமைச்சருக்கும் தமிழக முதல்வருக்குமிடையே நடந்த தொலைபேசி உரையாடல் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழக முதலமைச்சரின் செயல் அரசியல் சாசனத்துக்கு முரணானது என்றும், அவர் எடுத்துக்கொண்ட இரகசியக் காப்புப் பிரமாணத்துக்கு எதிரானது என்றும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டதுடன், ஜெயலலிதாவை **முதலமைச்சர் பதவியி**லிருந்து வலகும்படி நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமென்றும், இந்த வழக்கு முடியும்வரை அவர் முதலமைச்சர் பதவியில் தொடர்ந்து இருக்கக்கூடாது என்றும் கேட்டுள்ளார்.

இந்த வழக்கின் முடிவு இன்னும் சில தினங்களில் வெளிவரும்போது சுவாரஸ்சியமான அரசியல் திருப்பங்கள் பல ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

"தொலைபேசி உரையாடலைப் பதிவுசெய்யவில்லை; ஞாபகத்தில் இருந்து தொகுத்து எழுதினேன்" என்ற ஜெயலலிதாவின் கூற்றுக்குப் பதிலளித்த தமிழ்நாட்டின் முதுபெரும் அரசியல்வாதியொருவர், இது சாதாரண ஜெயலலிதாவுக்கும் சிவராஜ் பட்டேலுக்கும் இடையில் நடந்த உரையாடல் அல்ல; இந்



திய உபகண்டத்தின் மத்திய அமைச்சருக்கும், மாநில முதல்வர் ஒருவருக்கும் இடையே நடந்த உரையாடல். இதை

**சிபி**

எந்தவிதத்திலும் பகிரங்கப்படுத்தியிருக்கக்கூடாது. ஜனநாயகம், அரசியல் சாசனம், மனிதப்பண்பு ஆகியவற்றின் மரபுகளே இதனால் அழிந்துவிட்டன எனக் கூறியுள்ளார்.

அடுத்து நடக்கப்போவது என்னவெனத் தமிழக மக்கள் மாத்திரமல்ல, உலகமெங்கணும் பரந்துவாழும் தமிழ் மக்களும் ஆவலுடன் எதிர்பார்த திருக்கிறார்கள்.

---

## டிசம்பர் 31ஆம் திகதிவரை அரிசியை இறக்குமதி செய்யலாம்

### திறைசேரி அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை அரிசியை இறக்குமதி செயவதற்கு அனுமதி வழங்கப்படுமென திறைசேரி அறிவித்துள்ளது.

பெரும்போக அறுவடைகள் அடுத்த ஆண்டு சந்தைக்கு வரவிருப்பதால் அரிசி இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை ஜனவரிமாதத்திற்குப் பின்னரே அதிகரிக்கப்போவதாக திறைசேரி கூறுகிறது.

கடந்த மாதம் 27ஆயிரம மெற்றிக்தொன அரிசி இறககுமதி செய்யப்பட்டது என்றும், இதனால் மொத்த விற்பனை விலையே குறைந்தது, சில்லறை விற்பனைவிலை குறையவில்லை எனவும் திறைசேரி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (க-60)

---

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி......)

05. புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான வங்கி, சர்வதேச வர்த்தக சங்கம், சர்வதேச அபிவிருத்திச் சங்கம், உங்டாட் நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய பொதுச்சந்தை

1)மேலே தரப்பட்டுள்ள நிறுவனங்களில் இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் 3ஐத் தெரிவு செய்க.
2)சர்வதேச வர்த்தகத்தின் விருத்திக்கான 4 காரணிகளைக் குறிப்பிடுக.
3)இலங்கை போன்ற ஒரு நாடு சர்வதேச வர்த்தகத்தில் பாதகமான வர்த்தக மீதியைப் பெற்றுக்கொள்வதற்கான 5 காரணிகளைக் குறிப்பிடுக.
4)சர்வதேச வர்த்தகத்தால் ஏற்படக்கூடிய நன்மைகள் 2 தீமைகள் 2 தருக.

06. சமூகப் பொருளாதார சபை, சர்வதேச நீதிமன்றம், உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேச நாணய நிதியம், ஐ.நா அபிவிருத்தித் திட்டச் செயலகம்

1)மேலே தரப்பட்டுள்ளனவற்றில் இருந்து ஐக்கிய நாடுகள் சபையின் 3 உறுப்புகளைத் தெரிவு செய்க.
2)ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் 4ஐக் குறிப்பிடுக.
3)ஐக்கிய நாடுகள் சபையின் இணையத் தாபனங்கள் 5ஐக் குறிப்பிடுக.
4)ஐக்கியநாடுகள் சபை எதிர்நோக்கும் சவால்கள் 2ஐக் குறிப்பிட்டு விளக்குக.

07. **A.**அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் போசாக்கற்ற குழந்தைகள் காணப்படுகின்றனர்.
**B.**உலக மசகெண்ணை வரையறுக்கப்பட்டளவில் காணப்படுகிறது.
**C.**ஆறுகள், கடற்கரைகள் போன்றவற்றில் வரையறையின்றி மணல் அகழப்படுகிறது.

1)மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு இன்று எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் 3ஐ முறையாகத் தருக.
2)இரண்டாவது பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய வேறு வழிகள் 4 தருக.
3)தரை, நீர் என்பன மாசடையும் வழிமுறைகள் 5 தருக.
4)வளி மாசடைவதைத் தடுப்பதற்கு நீர் கூறும் ஆலோசனைகள் 2ஐப் பற்றி விளக்குக.

---

## நூலகமா போர்க்களமா?

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்டிய பகுதியிலுள்ள பாடசாலையொன்றின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் அதேபாடசாலையின் நூலகத்தில் கடமையாற்றும் நூலகர் ஒருவருக்குமிடையே ஏற்பட்டுள்ள விரிசல்கள் காரணமாக நூலகமே தமக்கு ஒரு போர்கக்களம் போல இருப்பதாக அப்பாடசாலை மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காரணம் எதுமின்றி சம்பந்தப்பட்ட நூலகர் மாணவர்களுக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இதனால் அப்பாடசாலையில் பயின்றுவரும் உயர்தர வகுப்பு மாணவர்கள் அப்பாடசாலை நூலகத்தை உரியமுறையில் பயன்படுத்திப பயன்பெறமுடியாத நிலை காணப்படுகிறது.

அததுடன் நூலகத்தைப் பயன்படுத்தச் செல்லும் மாணவர்களை அந்நூலகர் அவதூறாகப் பேசுவது சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவர்களின் மனநிலையில் பெரும் தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது. நூலகத்தை மாணவர்கள் அவசியம் பயன்படுதத வேண்டும் என வலியுறுத்தி அனைவரும் நூலக வாரத்தை பிரகடனப்படுத்தி பாடசாலை வாரியாக அதனை சிறப்பாக அனுஷ்டித்து வரும் நிலையில்,

நூலகர் ஒருவரே நூலகத்தை தாம் பாவிப்பதற்குத் தடையாக விளங்குகின்றமை குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள அப்பாடசாலை மாணவர்கள், தமது குறைகளை யாரிடம் முறையிடுவது எனத் தெரியாத நிலையில் அவதிப்பட்டு வருகின்றனர். (ப)

## கந்தரோடையில் நீர்விநியோகம் துண்டிப்பு குறித்து யாழ்.செயலகத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபை உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கந்தரோடை மக்களுக்கான குழாய்நீர் விநியோகத்தை துண்டித்தமை தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று நேற்று பிற்பகல் 3மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உடுவில் பிரதேச செயலர் திருவாகரன், நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபை பொறுப்பதிகாரிகள், பாதிக்கப்பட்ட பயனாளிகள் தரப்புப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டமைக்கான காரணங்கள் பற்றி ஆராயப்பட்டதுடன் அவற்றை நிவர்த்தி செய்து அப்பகுதி மக்களுக்கு மீண்டும் நீர் வழங்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன. (ரு-19)

# தமிழ்மொழி வழிக்கல்வி



வடக்குக் கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் 'தமிழ் மொழி வழிக்கல்வி மொழி பெயர்ப்புகள் கலைச்சொல்லாக்கம்' என்ற தலைப்பில் பேராசிரியர் சபா ஜெயராசா ஆற்றிய ஆய்வுரையின் தொகுப்பு இங்கே பிரசுரமாகிறது....

# மொழிபெயர்ப்புகள்

# கலைச்சொல்லாக்கம்

பேராசிரியர் சபா ஜெயராசா

குடியேற்றவாதக் கல்வியானது அடிப்படையில் ஒடுக்குமுறையை மௌனமான உட்பொருளாகக்கொண்டிருந்தது. தாய்மொழிக்கல்வி குடியேற்றவாதச் செயல்முறையால் முன்னெடுக்கப்பட்டாலும் மௌனமான ஒடுக்குமுறையின் பண்புகள் உள்ளடக்கத்தில் ஊடுருவியிருந்தன. ஒடுக்குமுறையின் பிறிதொரு பரிமாணம் சமூக நிரலமைப்பை மீள் பிறப்பாக்கம் செய்வதாக (Reproduction of Social Hierarchy) கல்விமுறை வடிவமைக்கப்பட்டிருந்தமையாகும்.

தமிழ் சமூகச் சூழலில் நிலமான்ய சமூகத்தில் மேலுயர்ந்திருந்தோரே ஆங்கிலக் கல்வியின் அதியுயர்ந்த அனுகூலங்களைப் பெற்றனர். சமூக மேலுயர்ச்சிக்குக் கல்வி பங்களிப்புச் செய்தமை பருமட்டாக 1930ஆம் ஆண்டுக்குப் பின்னரே ஓரளவு விசைகொள்ளலாயிற்று.

இச்சந்தர்ப்பத்தில் இரண்டு எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவை முதற்கண் ஏற்படுத்தவேண்டியுள்ளது.

1.புதிய தேடல்கள், புதிய பரிசோதனைகள், புதிய கண்டுபிடிப்புகள், புதிய கருத்தாடல்கள் முதலியவை அறிவின் விரிவாக்கம் (Expansion of knowledge) என்ற எண்ணக்கருவால் விளக்கப்படுகின்றன.

2. வியாபித்துச் செல்லும் அறிவு சாமானியர்களுக்கு எட்டப்பட முடியாத பண்டமாக மாறுதல் அறிவின் வீக்கம் (Knowledge Inflation) என்ற எண்ணக்கருவால் விளக்கப்படும். அதாவது அதிக பணத்தைச் செலவு செய்துதான் சிறிதளவு அறிவை நுகர்ச்சி செய்யக்கூடியதாக இருக்கும்.

இந்நாட்டின் தமிழ்மொழி வழிக்கல்வியில் நிகழ்ந்த மொழிபெயர்ப்பு மற்றும், கலைச்சொல்லாக்க முயற்சிகள் ஆகியவற்றில் ஈடுபட்டோர் சமூக நிரலமைப்பில் மேலுயர்ந்த தளங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இதனால் அவர்களது மொழிபெயர்ப்பு முயற்சிகளில் சாமானியர்களுடன் ஒட்டாத ஒருவித அந்நிய மயப்பாங்கு காணப்பட்டது. அதாவது சாமானியர்களது அறிகைத் தளத்திலே நின்று வளமான மொழிபெயர்ப்புக்களையும் கலைச் சொல்லாக்கங்களையும் அவர்களாலே தரமுடியாமற் போய்விட்டது. தாய்மொழிக் கல்வி பல்கலைக்கழகங்களிலே மேலுயர்ச்சி பெற்றமையைத் தொடர்ந்த சாமானியர்கள் உயர்கல்வி வாய்ப்பைப் பெற்றனர். அவர்களால்தான் வளமான மொழிபெயர்ப்பைத் தரும் நவீன காலகட்டம் உருவாக்கப்பட்டது.

தாய்மொழி வழிக்கல்வி அறிமுகம் செய்யப்பட்டதற்கு முன்னோடியாக இலங்கை அரச கருமமொழித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்பு நூல்களும் கலைச்சொல்லாக்கங்களும் பெருமளவில் நிலைபெற முடியாமல் போனமைக்குக் காரணம் சமூகத் தளத்திலே மேலுயர்ந்து நின்றோரின் புலக்காட்சி (Perception) சாமானியர்களின் அறிவுசார் புலக்காட்சியிலிருந்து வேறுபட்டு நின்றமையாகும். அந்த மொழிபெயர்ப்புக்களை வாசிப்பவை காட்டிலும் ஆங்கில மூல நூல்களை வாசித்தல் இலகுவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மொழிபெயர்ப்பு மற்றும் கலைச்சொல்லாக்கம் பற்றிய விளக்கங்களைப் பெறுவதற்கு மொழிபெயர்ப்புப் பற்றிய நால்வகைப் பண்புகள்பற்றிய தெளிவை ஏற்படுத்தவேண்டியுள்ளது. அவை,

**மொழிபெயர்ப்பு (TRANELATION)**

மூலமொழியில் இருப்பவற்றை அறிவுசார் நேர்மையுடன் (Intellectual Honesty) இலகு மொழியில் எடுத்துக்கூறுதல் மொழிபெயர்ப்பு ஆகின்றது.

**நேர்ப்பெயர்ப்பு (TRANSLITERATION)**

இலக்குமொழியின் மரபுகளை அறியாது மூலமொழியில் இருப்பவற்றை இலக்கு மொழிக்குத் தருதல். எடுத்துக்காட்டாக "WARM WELCOME" என்ற தொடரை சூடான வரவேற்பு என்று மொழிபெயர்த்தல்.

**ஆக்கநிலைப் பெயர்ப்பு (TRANSCREATION)**

மூலமொழியில் உள்ளவற்றை இலக்குமொழியிலே தரும்பொழுது மொழிபெயர்ப்பாவர் தமது ஆக்கத்திறன்களையும், கற்பனைகளையும் கலந்து தருதல் ஆக்கநிலைப் பெயர்ப்பு ஆகின்றது.

**அபத்தப் பெயர்ப்பு (TRANS CORRUPTION)**

மூலமொழியில் உள்ளவற்றைத் திரிபுபடுத்தியும் மலினப்படுத்தியும் கொச்சைப்படுத்தியும் இலக்கு மொழியிலே தருதல் அபத்தப் பெயர்ப்பு எனப்படும்.

தேசிய கல்வி நிறுவகம் மேற்கொண்ட எரு கலைச்சொல்லாக்கத்தை அதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். COUNSELLING என்ற ஆங்கிலச் சொல்லை "ஆலோசனை வழங்கல் (ADVICE)" என்று தமிழ்ப்படுத்தியுள்ளார்கள். ஆனால் COUNSELLING கற்ற எவருக்கும் தெரிந்திருக்க வேண்டிய ஓர் அடிப்படை என்னவென்றால் COUNSELLING செயற்பாட்டில் ஆலோசனை வழங்குதல் தவிர்க்கப்பட்டதும் தகாததுமான ஒரு செயற்பாடு என்பதாகும்.

இந்த இடர்ப்பாட்டை உணர்ந்த சிலர் இதனை "உளவளத் துணை" என்று மொழிபெயர்த்தார்கள். இது மூலமொழி எண்ணக்கருவோடு ஒன்றிணைந்திருந்தாலும் இது ஒரு தொடராக அமைந்த காரணத்தால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியல்துறை "சீர்மியம்" என்ற சொல்லை உருவாக்கியது. இந்தச் சொல் மேலும் பல எண்ணக்கருக்களைத் தமிழிலே வெளியிடுவதற்குத் துணையாக அமைந்தது.

சீர்மியம்- COUNSELLOR
சீர்மிய நாடி- COUNSELE

இந்திய விடுதலைப் போராட்டம் தேசிய மொழிகளின் ஆளுமையை வளர்ப்பதற்குரிய பக்க விளைவுகளைக்கொண்ட காலகட்டத்திலே, தமிழிலே கலைச்சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு பற்றிய கருத்தாடல்கள் எழத் தொடங்கியுள்ளன. இந்திய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துத் தலைமைதாங்கியோர் இந்திய தேசிய முதலாளிகளும், சமூக அடுக்கமைப்பில் மேலுயர்ந்து நின்ற பிரிவினருமாவர். இந்த மேலுயர்ந்தவர்களுக்கு எதிரான இயக்கமாகத் தனித் தமிழ் இயக்கம் முகிழ்ந்தெழுந்தது.

இந்தியாவின் மேலுயர்ந்த வகுப்பினர் மத்தியிலே விரவியிருந்த சமஸ்கிருதமொழி ஆட்சியை மறுதலிக்கும் முகமாக தனித் தமிழ் எழுத்தாக்கங்களிலே மட்டுப்பாடுகள் காணப்பட்டாலும் அது அடித்தள மாந்தரின் அறிக்கையோடு தொடர்புடையதாக இருந்தது. (சமூக அடுக்கமைப்பின் மேலுயர்ந்தோர் தனித் தமிழ் இயக்கத்தைக் கிண்டல் செய்தமையும் குறிப்பிடத்தக்கது) தமிழிலே வளமான கலைச்சொல்லாக்கம் மலர்ச்சிகொள்வதற்குத் தனித் தமிழியக்க விசை முக்கியமான பங்குவகித்தமையை மறுக்க முடியாது.

தமிழிலே கலைச்சொல்லாக்கமும் மொழிபெயர்ப்பும் வளர்வதற்குரிய பெரும் விசையாக அமைந்த நிகழ்ச்சி தமிழிலே சிந்திக்கும் கற்றவர்களின் பெருக்க நிகழ்ச்சியாகும். உயர் கல்வியிலே தமிழ்மொழி வழிக் கல்வி விரிவாக்கம் பெறத் தொடங்க உயர்நிலையான அறிவைத் தமிழ்மொழி வாயிலாக நுகர்வோரும் தமிழிலே உயர்நிலையான சிந்தனையை இயக்குவோரும் என்ற கற்றவர்கள் இந்நாட்டிலே வளரவும் பெருகவும் தொடங்கினர்.

ஆங்கிலமொழி வழிக் கல்வியைப் பெற்று ஆங்கிலத்திலே சிந்தித்து தமிழ்மொழி பெயர்ப்பில் ஈடுபட்டவர்களது ஆக்கங்களிலே காணப்பட்ட செயற்கையான பண்புகளும், அந்நியமாகிய பண்புகளும் தமிழ் மொழி வாயிலாக சிந்திப்போரால் இலகுவாக இனங்காணப்பட்டன.

உயர் கல்வியைத் தமிழிலே நுகர்ந்து, தமிழிலே சிந்தித்து அதேவேளை ஆங்கில மொழிப்புலமையை வளமாக்கித் தமிழ் மொழிபெயர்ப்புக்களைத் தந்தவர்கள் வரிசையில் பேராசிரியர்கள் பொ. பாலசுந்தரம்பிள்ளை, வி.நித்தியானந்தன், சோ.கிருஷ்ணராஜா, சோ.சந்திரசேகரன், ப.கோபாலகிருஷ்ண ஐயர், சி.க.சிற்றம்பலம், ம.சின்னத்தம்பி என்றவாறு தொர்ச்சியாகப் பல பேராசிரியர்களைக் குறிப்பிடலாம்.

* * *

**சமூகக் கல்வியும் வரலாறும்**
**பகுதி I இன் விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 01.2 | 02.2 | 03.2 | 04.1 |
| 05.3 | 06.2 | 07.3 | 08.3 |
| 09.2 | 10.3 | 11.1 | 12.2 |
| 13.3 | 14.2 | 15.1 | 16.2 |
| 17.2 | 18.4 | 19.4 | 20.3 |
| 21.3 | 22.2 | 23.2 | 24.2 |
| 25.4 | 26.2 | 27.3 | 28.3 |
| 29.4 | 30.3 | 31.1 | 32.4 |
| 33.4 | 34.1 | 35.4 | 36.3 |
| 37.3 | 38.1 | 39.4 | 40.3 |

க.பொ.த(சா/த) மாணவர்களே!
உங்களின் நன்மை கருதி வலம்புரியில் தொடர்ந்து உங்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் வெளிவருகின்றன.
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

# திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றி ஈட்டுபவர்களுக்கு 25,000 ரூபா பரிசு!

(யாழ்ப்பாணம்)

திருக்குறள் முழுவதையும் மனனம் செய்து ஒப்புவிப்பவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படும் என யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு இடையிலான மனனப் போட்டி நேற்று யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்விற்கு தமிழ்மொழி உதவிக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் தலைமை தாங்கினார்.

அரச் சிந்தனையில் உள்ள வள்ளல் ஒருவரின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இப்போட்டியில் ஆரம்ப உரையை நிகழ்த்திய விக்னேஸ்வரன், திருக்குறளின் சிறப்புக்களை தமிழ் கூறும் நல் உலகம் எல்லாம் அறியச் செய்யும்வித்தில் போட்டி அமையவேண்டும் என்றும், இத்தகைய போட்டி சமூகத்தின் இளம் சந்ததியினரின் ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யும் எனவும் கூறினார்.

இப்போட்டியில் கலந்துகொள்ளவென யாழ்.மாவட்டத்திலிருந்து ஆயிரத்து 500 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

அந்தளவுக்குத் திருக்குறள் சிறப்புப் பெற்றுள்ளது. அதுமட்டுமன்றி திருக்குறளை மேற்கோள் காட்டாத அறிஞர்கள் இல்லை. எனவே எதிர்கால சந்ததியினர் திருக்குறளை அறிந்து ஞாபகப்படுத்தி அதனைப் பிரயோகிக்கும் திறனை அதிகரிக்கச் செய்யவேண்டும்.

அதற்காகவே 1330 திருக்குறள்களை மனனம் செய்து ஒப்புவிப்போருக்கு 25ஆயிரம் ரூபா பரிசாக வழங்கத் தீர்மானித்துள்ளோம் என்றார்.

இதேவேளை போட்டியின் இணைப்பாளரும் நேற்றைய நிகழ்விற்குத் தலைமைதாங்கி நடத்தியவருமான தமிழ்மொழி உதவிக் கல்விப்பணிப்பாளர் ஸ்ரீதயாளன் கருத்துத் தெரிவிக்கையில்,

திருக்குறள் மனனப் போட்டியில் புதிதாகச் சேரவிரும்புபவர்கள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ள திருக்குறள் மனனப்போட்டியில் பங்குபற்றலாம் எனத் தெரிவித்தார். (க)

# சேவைக்கால பயிற்சிகள்

(சாவகச்சேரி)

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினதும் தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தினதும் இணைந்து முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தினூடாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிநெறியை வழங்கவுள்ளனர்.

இதில் யாழ்.மாவட்டத்திலிருந்து 1178 ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை மன்னாரில் கடந்த 24ஆம் திகதி இடம்பெற்ற 16 நாள் பயிற்சி 4 கட்டங்களாக நடத்தப்பட்டுள்ளது என முன்பள்ளி மேம்பாட்டு அதிகாரி தெரிவித்தார். (ப-17)

## மீள் பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம்-3 தொடர்

மு. திருச்செல்வம்

## தமிழ் ஈழம்— அரசும் நாடும்

### சங்கிலி மன்னன்

தமிழ் ஈழ அரசை எதிர்த்து உள்நாட்டில் கலகம் நடை பெற்றது. 1618 ஆவணி, புரட்டாதி மாதங்களில் இந்தக் கலகம் நடைபெற்றது. சங்கிலி மன்னன் அப்பொழுது தமிழ் ஈழத்தின் தன்னிகரற்ற மன்னனாக அட்சி செய்தான்.

போர்த்துக்கேயப் பாதிரியார் பீதுறு பொட்டன் கொன் தலைமையில் கலகம் நடைபெற்றது. தமிழ் ஈழ அரசைக் கவிழ்க்க வேண்டும். போர்த்துக்கேயரின் ஆட்சி அங்கு நிறுவப்பட வேண்டும் இதுதான் கலகக்காரரின் நோக்கம். மன்னாரில் படைகளுடன் இருந்த போர்த்துக்கேயர்கள் இதற்கு மறைமுக ஆதரவு தந்தனர். சங்கிலி மன்னன் தனது படைப்பலத்தைப் பயன்படுத்தினான். மேலதிக உதவி தேவைப்படவே தஞ்சை நாயக்க மன்னனுக்குச் செய்தி அனுப்பினான்.

"தமிழ் நாட்டுக்கும் தமிழ் ஈழத்துக்கும் உள்ள தொடர்புகள் வெறும் சொல்லளவுத் தொடர்புகளல்ல. இதோ செயலில் காட்டுகிறோம். வருணகுலத்தானையும் ஐயாயிரம் வீரர்களையும் அனுப்புகிறோம்" தஞ்சை இரகுநாத நாயக்க மன்னன் செய்தே காட்டினான். தமிழ் ஈழ அரசு தொல்லைக்குள்ளாகின்றது, துன்புறுகின்றது. அல்லற்படுகின்றது என்றால் தமிழ் நாட்டில் உள்ள அரசுகள் அக்கறை காட்டுகின்றன. கடலைத்தாண்டி உள்ள ஒரே தமிழ் அரசு தமிழ் ஈழ அரசு மட்டும்தான் தமிழ் ஈழ அரசுக்கு உதவுதல், ஒத்தாசை புரிதல், தமிழ் நாட்டு அரசுகளின் கடனல்லவா? சங்கிலி மன்னனுக்குப் பக்கபலமாக இரு என வருணகுலத்தானிடம் கூறிப்படை அனுப்பினான் தஞ்சை இரகுநாத நாயக்க மன்னன்.

சங்கிலி மன்னனின் படைகள் கலவரத்தை அடக்கின. தஞ்சைப் படைகளையும் மன்னன் பயன்படுத்தினான். நாட்டில் ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்டுவது மன்னனின் கடன். அமைதியையும் கட்டுப்பாட்டையும் அமுல் நடத்துவதும் மன்னனின்கடன். சங்கிலி மன்னன் தன் உயர்ந்த கடமையைச் செய்தான். செய்வதற்குரிய ஆட்சியுரிமை அவனிடம் இருந்தது. ஒப்பாரும் மிக்காரும் இல்லா இறைமை அவனுடையதாக இருந்தது.

### தமிழ் ஈழ அரசைக் கைப்பற்றுக

சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரின் தொல்லைகளை அறிவான். வாய்ப்புக் கிடைத்தால் சப்புமால், குமரையா போன்றவர்களை அனுப்பித் தமிழ் ஈழ அரசை அடக்கி ஆளச் சிங்கள அரசர்கள் கூட முயல்வார்கள் என்பதையும் சங்கிலி மன்னன் அறிவான்.

"யாழ்ப்பாணத்தைத் தலைநகராகராக் கொண்ட தமிழ் ஈழ அரசைக்கைப்பற்றுக" ஏன்ற ஆணையை 1617 இல் கோவாவில் இருந்த தனது இந்திய ஆளுநருக்குப் போர்த்துக்கேய மன்னன் அனுப்பியிருந்தான். இந்த ஆணையை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தனர். இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள படைத்தளபதிகள் 1619 ஜனவரி வரை அந்த ஆணையை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையைத் தமிழ் ஈழமன்னன் சங்கிலி போர்த்துக்கேயருக்கு விட்டு வைக்கவில்லை.

தமிழ் ஈழ அரசுக்கும் அகன்ற போர்த்துக்கேய அரசுக்கும் போர்கள் நடந்தது உண்டு. போர்களில் மாறி மாறி இரு அரசுகளும் வெற்றி ஈட்டியுள்ளன. திறைப்பணம் கொடுக்கும் அளவிற்குத் தமிழ் ஈழ அரசு போர்துக்கேய அரசிடம் சரணாகதியடையவில்லை. அடிமைப்படவில்லை.

இரு ஆண்டுகளாகச் சங்கிலி மன்னன் போர்த்துக்கேயருக்கு எதுவும் கொடுக்கவில்லை. வலுக்கட்டாயமாகச் சன்மானம் கொடுப்பது கூடச் சங்கிலி மன்னனின் தன்மான உணர்வுக்கு ஒப்புவதாக இல்லை. எதுவும் பெறாத நிலையில் திறையைக் கேட்டு எழுதினான் போர்த்துக்கேயன். போர்த்துக்கேயர் போருக்கு மீண்டும் தயாராவதைச் சங்கிலி மன்னன் உய்த்துணர்ந்தான். திறைகேட்டு எழுதிய ஓலைக்குச் சங்கிலி மன்னன் பதில் அனுப்பவில்லை பதில் அனுப்பத் தேவையில்லை என எண்ணினான்.

### ஒல்லாந்தர்

சங்கிலி மன்னன் இரண்டு வழிகளைத் தேர்த்தெடுத்தான் ஒல்லாந்தர் மேலைநாட்டவர். சிறிது சிறிதாகக் கீழைத்தேய நாடுகளில் காலடி எடுத்து வைக்க முனைகின்றவர்.

தமிழ் நாட்டில் பழவேற்காட்டில் ஒல்லாந்தர் படையும் பாசறையுமாக உள்ளனர். கோட்டை கொத்தளம் அமைத்திருந்தனர். ஒல்லாந்தர் நறுமணப்பொருள் வாணிபத்தில் நேரடிப் பங்கு கொள்ள விரும்பினர். போர்த்துக்கேயரின் செல்வாக்கைப் போக்க விரும்பினர். ஒல்லாந்தரிடம் போர்த்துக்கேயரைத் தாக்கி முறியடிக்கக் கூடிய கப்பற்படை இருந்தது; ஆயுதங்கள் இருந்தன. சென்னைப் பட்டினத்திக்கு வடக்கேயுள்ள பழவேற்காட்டுப் பாசறையிலுள்ள ஒல்லாந்தருக்குச் சங்கிலி மன்னன் செய்தி அனுப்பினான். போர்த்துக்கேயருக்கு எதிராகத் தனக்கு உதவும்படி கேட்டிருந்தான்.

### குஞ்சலி வீரர்

இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலுள்ள மலையாளப்பட்டினம் கோழிக்கோடு இங்கே உள்ள மலையாளிகள் போர்த்துக்கேயரின் கொள்கைகளை விரும்பாதவர்கள்.

குஞ்சலி வீரர்கள் இவர்களுள் முதன்மையானவர்கள் கடலிலேயே போர்த்துக்கேயரின் கடற்படைக்கும், வாணிபக் கப்பற்கட்கும் தொல்லை கொடுப்பவர்கள். குஞ்சலி வீரர்களின் கடற்படையை அடக்க போர்த்துக்கேயர் பல முறை முயன்றனர்; முடியவில்லை. கடைசிய்க அவர்களிற் சிலரைச் சிறையில் வைத்தனர். மதமும் மாற்றினர். சிறையில் மதமாறி பின்னர் சிறையில் இருந்து தப்பியோடியவன் டொம் பீதுறு ரொட்றிகஸ் தப்பியோடியவன் தனக்கென ஒரு கப்பற்படையை அமைத்தான். ஆறு ஏழு கப்பல்களுடனும் வீரர்களுடனும், போர்த்துக் கேயருக்குத் தொல்லை கொடுத்தான்.

சுங்கிலி மன்னன் டொம் பீதுறு ரொட்றிகஸ்ஸுக்குச் செய்தி அனுப்பினான். 1619ல் மார்ச் மாதத்தில் டொம் பீதுறு ஆறு கப்பல்களில் மலையாளப் படைகளை அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணக் கடற்கரைக்கு வந்தான். சங்கிலி மன்னனைக் கண்டான். சங்கிலி மன்னனின் ஆணையை எதிர்பார்த்து யாழ்ப்பாணத்தை ஒட்டிய கடலில் நங்கூரம் பாய்ச்சி நின்றான்.

### உட்பகை

1618ஆவணி, புரட்டாதியில் நடைபெற்ற உள் நாட்டுக் கலகத்தை தூபம் போட்டு வழி நடத்தியவர்கள் அந்நியப் பாதிரிமார்களே. வருணகுலத்தான் தலைமையில் ஐயாயிரம் வீரர்களைச் சங்கிலி மன்னனன் அழைத்துக் கலவரத்தை அடக்கியதை இவர்கள் உள்ளூர ஆதரிக்கவில்லை.

(தொடரும்)



எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள வகுப்பறைகளுக்கான அடிக்கல்லினை தீவக வலய ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.சிவபாதம் நாட்டுவதையும், அருகில் சேவைக்கால ஆலோசகர் வி.தனிநாயகம் நிற்பதனையும் படத்தில் காணலாம். (படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)



ச.முருகானந்தனின் 'இது எங்கள் தேசம்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் மல்லிகையின் ஆசிரியர் டொமினிக் ஜீவா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டார். நூலின் விமர்சன உரையை டாக்டர் எம்.கே.முருகானந்தனும், நயப்புரையை சற்சொரூபவதி நாதனும் நிகழ்த்தினர். ச.முருகானந்தன் அண்மையில் தனது "தரைமீன்கள்" சிறுகதைத் தொகுதிக்காக கடந்த ஆண்டிற்கான சாகித்திய மண்டல விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட முதிய விவசாயிகளுக்கான விருது வழங்கிக் கௌரவிக்கும் தேசிய நிகழ்வு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்ட மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க.முதலியாருக்கு அண்மையில் உடுவில் கமநல சேவைகள் நிலையத்தில் வரவேற்பு விழா நடைபெற்றது. உடுவில் விவசாயிகள் சம்மேளன சமாசத்தலைவர் சி.திருக்குமார் இவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் அருகே பெரும்பாக உத்தியோகத்தர் சு.சோதிநாதனையும் படத்தில் காண்க.

(படம்: இணுவில் செய்தியாளர்)

## விவாத அரங்கு - 6

விடயம்

**மதமாற்றத் தடைச் சட்டம்**
**தேவையானதா?**
**தேவையற்றதா?**

நடுவர் : விதுரன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர்

# பாகிஸ்தான் 6 விக்கெற்றுக்களால் வெற்றி

# ஹட்ரிக் தொடர் வெற்றி கைநழுவியது

பாகிஸ்தான் இலங்கை அணி களுக்கிடையே கராச்சியில் நேற்று முன்தினம் நடந்து முடிந்த இரண ாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ் தான அணி ஆறு விக்கெட்டுக்




களால் வெற்றிபெற்றுள்ளது.

இவ்வெற்றி மூலம் பாகிஸ் தான் 1:1 என தொடரை சமப்படுத் தியுள்ள அதேவேளை, இலங்கை அணிக்கு ஹட்ரிக் தொடர் வெற்றி கைநழுவிப் போயுள்ளது.

இலங்கை முதல் இன்னிங்ஸ் 208, பாகிஸ்தான்-478 முதல் இன் னிங்ஸில் 270 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை அணி ஆட்ட நேர முடி வில் 7 விக்கெற்றுக்களை இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றிருந் தது.

ஆட்டமிழக்காதிருந்த ஜெய சூரிய 96 ஓட்டத்துடனும் 4 ஓட் டத்துடனும் சங்ககார ஆட்டத்தைத தொடர்ந்தனர். ஜெயசூரிய மேலும 11 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 107 ஓட்டங்களுடன் கனேரியாவின் பந்து வீச்சில் சொகைப் மாலிக் கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந் தார்.

தொடர்ந்து சங்ககாரவுடன் மஹில இணைந்து மூன்றாவது விக்கெற்றுக் காக விளையாடி ஓட்டங்களைக் குவித்தனா. அணி மொத்தம் 253 ஆக இருந்த போது மஹில 32 ஓட்டங்களுடன் கனேரியாவின் பந்து வீச்சில் யசீர் ஹமீட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து சங்ககாரவுடன் டிலான சமரவீர இணைந்தார். அவர் 22 ஓட்டங்களில் தனது விக்கெற்றை இழந்தார். அதிக நேரம் களத்தில நின்று 130 பந்துகளை எதிர் கொண்டபோதும் 22 ஓட்டங்களை



மாத்திரமே அவர் பெற்றார்.

சங்ககார மிகவும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி சதமடித்து மொததம் 138 ஓட்டங்களைப் பெற் றார். அவரது விக்கெற்றை நவீட் உல் ஹசன் பெற்றார். முபாரக், களுவிதாரண ஆகியோர் தலா 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, நான்காம் நாள் ஆட்டமுடிவில் இலங்கை அணி 7 விக்கெற்றுக் களை இழந்து 361 ஓட்டங்களைப்



பெற்றிருந்தது. தொடர்ந்து வாஸ் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதி ருந்தார்.

இறுதி நாள் ஆட்டம் நேற்று முன்தினம் தொடர்ந்தபோது கடை நிலை வீரர்களான மஹ்ரூப், ரங் கன ஹேரத், டில்ஹார பெர்னான்டோ ஆகியோர் ஓட்டங்களைச் சேர்ப் பதில அக்கறை காட்டாமல் பந்து களைச் சமாளிப்பதிலேயே நேரத் தைக் கடத்தினர். சமிந்தவாஸ் 114 பந்துகளில் 5 பவுண்டரிகளு டன் 32 ஓட்டங்களைப் பெற்று ஆட் டமிழக்காதிருந்தார். இத்துடன் அவர் டெஸ்ட் போட்டிகளில் 2000 ஓட் டங்களைத் தாண்டி இருக்கிறார். 200 விக்கெற்றுக்களையும் பெற்று 2000 ஓட்டங்களையும் கடந்த ஒன் பதாவது சகலதுறை ஆட்டக்காரர் என்ற பெருமையையும் பெறுகிறார். அத்துடன் ஒரு செஞ்சுரிகூட அடிக் காது 2000 ஓட்டங்களைக் கடந்த மூன்றாவது வீரராகிறார். இந்திய ஷேப்டன சௌகான், ஆஸி-ஷேர்ன் வோன் ஆகியோர் மற்றையவர் கள்.


பாகிஸ்தான் சார்பில் பந்து வீச் சில் கனேரியா 7 விக்கெற்றுக் களையும், நவீட்-உல்-ஹசன் 3 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

137 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய பாகிஸ் தான் அணி விரைவாக ஓட்டங் களைக் குவிக்க முற்பட்டது. ஆயி னும் தொடக்க ஆட்டக்காரர் இம் ரான் 19 ஓட்டங்களில் ஆட்டமிழந் தார். யூனிஸ்கான் 14, யசீர் ஹமிட்-



15,யூசுப் யுகானா-1 ஓட்டங்களை எடுத்தனர். சொகைப் மாலிக் 53 ஓட்டஙகளுடனும், அப்துல் ரஸாக் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக் காது வெற்றி இலக்கை அடைந் தனர்.

பந்துவீச்சில் வாஸ், ஹேரத் இருவரும் தலா 2விக்கெற்றுக் களை வீழ்த்தினர். பாகிஸ்தான் 6 விக்கெற்றுக்களால் இப்போட் டியை வென்றதன் மூலம் டெஸ்ட் தொடரை சமப்படுத்தியது. இப் போட்டியின் ஆட்ட நாயகனாக டினேஸ் கனேரியாவும் தொடர் நாய கனாக சனத்ஜெயசூரியவும் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டியில் தோல்வி அடைந்ததால் இலங்கை அணி தனது ஹட்ரிக் தொடர் வெற் றியை இழந்தது. (ப-7)



அமெரிக்காவின் ரெக்ஸ மாநிலத்திலுள்ள லோக் ஸ்டார் மைதானத் தில் நடைபெற்ற குதிரைப் பந்தயத்தில் கோஸ்ட்ஸப்பர் எனும் குதிரையை ஓட்டிச்சென்ற ஜாவீர் காஸிலோனோ வெற்றிபெற்றார். இவர் ரோஸஸ் எனும் குதிரையை ஓட்டிச்சென்ற ஜோன் வெலொஸ் கியு,ஸை குறுகிய இடைவெளியில் முந்திச்சென்று இவ் வெற்றியைப் பெற்றார்.


# சுவிஸ் உள்ளக டென்னிஸ்

# ஜெர்ரி நோவக் சம்பியன்

சுவிற்சர்லாந்திலுள்ள பசெல் நகரில் நடைபெற்ற சுவிஸ் உள் ளக டென்னிஸ் தொடரின், ஆண் கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப் போட்டியில் செக் குடியரசின் ஜெர்ரி நோவக் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

கடந்த ஞாயிறு நடைபெற்ற இறுதிப போட்டியில் ஆர்ஜென்டீனா வின் டேவிட் நள்பாந்தியனை எதிர்த்து விளையாடினார் நோவக். இரு வீரர்களும் மாறி மாறி செற் களைக் கைப்பற்றியதால் கடும் போட்டி நிலவியது.

இறுதியில் நோவக் 5:7, 6:4,1:6,6:2 என்ற நீண்ட செற்க



ளில் வெற்றிபெற்று சம்பியன் பட் டத்தை வென்றார். (ப-7)

# பந்துவீச்சில்தான் வேகம்

# கார் ஓட்டுவதில் கிடையாது

இந்தியாவில் நடைபெற்று வரும் ஆஸிக்கு எதிரான டெஸ்ட் தொட ரில் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ பங்குபற்றவில்லை. அவுஸ்திரேலிய கிரிக்கெற் சபைக் கும் பிரட்லீக்கும் இடையே விளம் பரம் தொடர்பாக ஏற்பட்ட பிரச் சினையே இதற்குக் காரணம.

இநநிலையில் அப்பிரச்சினையை மறக்க கார் ஓட்டத்தில் தனது நேரத்தை செலவிடுகிறார். லீ பந்து வீச்சில அவுஸ்திரேலியாவிலேயே அதிவேகமானவரான போதும், கார் ஓட்டுவதில் நிதானமாகவே அவர் இருக்கிறார்.

வொக்ஸ்வேகன் போக்ஸ் காருக் குச் சொந்தக்காரரான லீ, அடிக் கடி கார் ஓட்டுவது ஊக்கமும், புத்துணர்வும் அளிப்பதாகக் கூறி யிருக்கிறார்.

தான் விரும்பிய அனைத்து அம்சங்களும் உள்ள வேகமாகச் செல்லக்கூடிய தனது காரில் கிட் டத்தட்ட 5 மணி நேரம், அவுஸ் திரேலிய தென்பகுதியிலுள்ள அதிக வெப்பம் உள்ள இடமான 'சவுத் கோஸ்டிங்' கடற்கரை வீதி யில் காரோட்டியது வாழ்நாளி லேயே மறக்க முடியாதது என்றார்.

வேகப்பந்து வீச்சாளராக 160 கிலோ மீற்றர் வேகத்தில் பந்து வீசும் பிரட்லீ, கார் ஓட்டுவதில அதிக வேகத்துடன் ஓட்டுவதில்லை. 100கிலோ மீற்றர் வேகத்தில் அதி கம் தொடர்ந்து கார் ஓட்டியிருக் கும் லீ, வேகக் கட்டுப்பாடுகளைத் தான் மதிப்பவன் என்கிறார்.

கார் ஓட்டப் பந்தய வீரர்களில் ஆமோக்கர் தன்னைக் கவர்ந் வர் என்கிறார் பிரட்லீ. (ப-7)

# மும்பாய் டெஸ்ட் போட்டியில்

# சுழல் பந்துக்கு வாய்ப்பு அதிகம்

மும்பையில் நடைபெற்ற அவுஸ் திரேலியாவுக்கு எதிரான மூன்றா வது டெஸ்டில் சுழற்பந்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப் படும் என்பதால் இந்திய அணி யில் மூன்று சுழற்பந்து வீச்சாளர் கள் இடம்பெறலாம் என இநதிய அணியின பயிற்றுவிப்பாளர் ஜோன் ரைட் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 0:2 என தொடரை இழந்துவிட்ட நிலையில், இறுதிப் போட்டியிலாவது வெற்றிபெற வேண் டும் என்ற நோக்கத்துடன் இந்திய அணி இப் போட்டிக்காகக் காத் திருக்கின்றது.

நாக்பூர் ஆடுகளம், வேகப்பந்து வீச்சாளருக்கு சாதகமான வகை யில் அமைக்கப்பட்டிருந்தமை குறித்து இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி அதிருப்தி தெரி வித்திருந்தார்.

இதே பிரச்சினை மும்பையிலும் ஏற்படக்கூடாது என்பதில் ஆடுகளப் பராமரிப்பாளர் கவனமாக உள்ளனர்.

மும்பாய் ஆடுகளம் தொடர் பாக ஜோன் ரைட் கூறும்போது, சுழற்பந்துக்கும் பவுண்ஸர் பந்திற் கும் அக்களம் ஏற்றதாகக் காணப் படுவதால் இறுதி 3 நாட்களும சுழற்பந்துக்கு சாதகமானதாக ஒத் துழைக்கும் என்பதால் அணியில் அதிகம் சுழற்பந்து வீச்சாளர்கள் இடம பெறுவார்கள். அனில் கும்ளே, ஹர்பஜன்சிங், முரளி கார்த்திக் ஆகியோர் இடம்பெறுவர்.

முதல் டெஸ்டில் ஹர்பஜன் 11 விக்கெற்றுக்களையும், சென் னையில் கும்ளே 13 விக்கெற்றுக் களையும் வீழத்தினர். நாக்பூரில் முரளி கார்த்திக் முக்கிய விக் கெற்றுக்களை வீழ்த்தினார். ஆத லால் மூவருமே மும்பாய் டெஸ் டில் இடம்பெறுவர் என எதிர்பார்க் கப்படுகிறது. (ப-7)

# ஏடிபி டென்னிஸ் போட்டி

# ரஷ்யாவின் யுசானி சம்பியன்

ரஷ்யாவின் சென்.பீற்றர்ஸ் நக ரில் நடைபெற்ற முன்னணி டென் னிஸ் நட்சத்திரங்கள் பலர் பங்கு பற்றிய ஏடிபி டென்னிஸ் தொட பில் ரஷ்யாவின் மினகல் யுசானி சம்பியன் பட்டத்தை வென்றுள் ளார்.

கடந்த ஞாயிறு நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவுக்கான இறுதிச் சுற்றுப் போட்டியில் யுசானி செலோவாக்கியாவின் கரோல் பெக்கை எதிர்த்து விளையாடினார்.

சுமார் 62 நிமிடங்கள் மாத்தி ரமே நடைபெற்ற இப் போட்டியில் யுசானி 6:2,6:2என்ற நேர் செற்க ளில் கரோல் பெக்கை இலகுவாக வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார். (ப-7)

# ஹொக்கி வீரரின் சிகிச்சைக்கு கிரிக்கெற் அணியினர் பண உதவி

பாகிஸ்தான் ஹொக்கி அணி யின் கோல் காப்பாளர் முஹமட் காசிமின் மேலதிக சிகிச்சைக் காக, பாகிஸ்தான் கிரிக்கெற் அணி யினர் 3ஆயிரத்து 500அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளனர்.

ஒலிம்பிக் போட்டியில் விளை யாடிய முஹமது காசிம் பயிற் சியில் ஈடுபட்டபோது பந்து மார் பைத் தாக்கியதால் பாதிக்கப்பட் டார். மேலதிக சிகிச்சைக்காக அவரை வெளிநாட்டுக்கு அனுப்பு வதற்காக உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்தே இவ் உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

பந்துபட்ட இடத்தில் இரத்தம் கண்டிப்போயுள்ளதால் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போதும் பூரண சுகம் கிடைக்காத நிலையிலேயே அவர் மேலதிக சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுள் ளது.

தாய் நாட்டுக்கு காசிம் செய்த சேவைக்காக அவருக்கு 3500 டொலர்களை மருத்துவ உதவிக் காக வழங்குவதாக பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் சார்பில் அணித்தலைவர் இன்சமாம் கூறி யுள்ளார். (ப-7)

## விளையாட்டு செய்திகள்

# நியு,சிலாந்துபோட்டிகளில் முரளிதரன் பங்கேற்பார

இலங்கையின் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளி தரன், நியூசிலாந்துக்கான சுற்றுப் பயணத்தில் பங்குபற்றுவாரென இலங்கைக் கிரிக்கெற் சபைத் தலைவர் மோஹன் டி சில்வா தெரிவித்துள்ளார்.

தோட்பட்டை சத்திர சிகிச்சைக் குப்பின் கடந்த பல தொடர்க ளில் விளையாடாத முரளி குண மடைந்து வருவதால் நியூசிலாந்து தொடரில் பங்கேற்க முடியும்.

இலங்கை அணி டிசம்பர் 21ஆம் திகதி நியூசிலாந்து செல்லவுள் ளது. இரண்டு டெஸ்ட் போட்டிகளி லும் ஐந்து ஒருநாள் போட்டிகளி லும் இலங்கை அணி விளையாட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-7)

# சமஷ்டி முறையில் தீர்வுகாணபதற்கு உறுதியான இனக்கப்பாடு முன்பு இருந்தது

## பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சமஷ்டி முறையில் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முன்னைய அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுககும் இடையே உறுதியான இணக்கப்பாடு இருந்தது.

இவ்விடயம் டோக்கியோ மற்றும் ஒஸ்லோப் பிரகடனத்திலிருந்து தெளிவாகின்றது என ஐக்கிய தேசியக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான பேராசிரியர் ஜீ எல் பீரிஸ் தெரிவித்துள் ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு நவமபர் மாதம் 25 ஆம் திகதி சமாதானப் பேச்சுவார்த்தையின் இறுதியில் ஆசிய, வடஅமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளினதும் பங்குபற்றுதலுடன் ஒஸ்லோப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப புலிகளுக்குமிடையிலான சமாதானப பேச்சுவார்த்தைகளின் மூன்றாவது கட்டநிறைவின் போது நோர்வே அரசாங்கம் ஒஸ்லோப்பிரகடனத்தை வெளியிட்டது.

கடந்த 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி வெளியிடப் பட்ட டோக்கியோ பிரகடனத்தில் 51 நாடுகளும் 22 சர்வதேச அமைப்புக்களும் கைச்சாத்திட்டன. இதற்கமைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அரசியல் வியூகம் அடையாளம் காணப்பட்டிருந்தது.

இந்த வியூகம் தொடர்பாக எதிர்காலத்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது உறுதிப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் இருதசாப்த காலமாக நடைபெற்று வந்த யுத்தத்திற்கு மாற்று வழியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான அரசியல் தீர்வொன்றை நோக்கிச் செல்வதற்குத் தேவையான வரைவு தொடர்பாக முதற்தடைவையாக இணககப்பாடொன்றுக்கு வரமுடிந்தது எனவும் ஜீ. எல். பீரிஸ் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ற-121)

# கொப்பேகடுவவின் சிலை உடைப்பு குறித்த செய்திக்கு புலிகள் மறுப்பு

(வவுனியா)

வவுனியாவில் அமைந்துள்ள கொப்பேகடுவவின் சிலையினை தமிழீழ விடுதலைப் புலிகள் தகர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக வெளியான செய்தியில் எந்தவிதமான உணமையும் இல்லை என வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

லக்மிம என்ற சிங்கள வாரப் பத்திரிகையில்,வவுனியா நகர்ப் பகுதியிலுள்ள கொப்பேகடுவவின் சிலையினை தமிழீழ விடுதலைப் புலிகள் உடைத்திருப்பதாகவும் மன்னாரில் சிலை அமைப்பதற்கு படையினர் அனுமதி வழங்காததன் எதிரொலியாகவே இதனை உடைக்க விடுதலைப் புலிகள் முடிவு செய்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து கொப்பேகடுவவின் சிலைக்கு இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்பு வழங்கி வருகிறார்கள். இந்நிலையிலே இந்த விடயம் தொடர்பாக வவுனியா மாவட்ட அரசில்துறையினர் மறுப்பை வெளியிட்டுள்ளனர்.

இறந்த ஒரு மனிதரின் உருவச் சிலையினை உடைக்கும் அளவிற்கு விடுதலைப் புலிகள் மோசமானவர்கள் இல்லை.

சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரானவர்கள் எம்மீது இவ்வாறான அவதூறான செய்திகளை வெளியிட்டுவருகின்றனர் எனவும் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் சூட்டிக் காட்டியுள்ளனர். (ற-121)

# மிருசுவில் படுகொலை குறித்த வழக்கு விசாரணை நாளை ஆரம்பம்

(கொழும்பு)

மிருசுவில் படுகொலை சம்பந்தமான வழக்கு விசாரணையை நாளை வியாழக்கிழமை ஆரம்பிப்பதற்கு பிரதம நீதியரசர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கமைய கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர் சரத் அம்பேபிட்டிய தலைமையிலான 3 நீதியரசர்களைக் கொண்ட குழுவினர் இந்த வழக்கு விசாரணையை செய்யவுள்ளனர்.

யூரிமார் எவருமில்லாத நிலையில் நாளை வியாழக்கிழமை இந்த விசாரணை ஆரம்பமாக உள்ளது.

இதறகு முன்னர் இந்த வழக்கை விசாரித்த நீதிபதி குழுவின் தலைவர் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக நியமிக்கப் பட்டதைத் தொடர்ந்து இந்த வழக்கு இடைநிறுத்தப்பட்டிருந்தமை தெரிந்ததே.

மிருசுவிலைச் சேர்ந்த 8 பொது மக்களை படுகொலை செய்து புதைத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் 5 இராணுவ வீரர்களுக்கு எதிராக சட்டமாஅதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கு விசாரணை முடியும் வரை பிரதிவாதிகள் விளக்க மறியலில் வைக்கப்படுவார்கள் எனக் கூறப்படுகிறது. (க-60)

# வடமராட்சி கிழக்கில் கிராம சேவகர் ஒருவர் மக்களால் தாக்கப்பட்டார்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த கிராமஅலுவலர் கடமையில் இருநத பொழுது பொது மக்களால் பலமாகத் தாக்கப்பட்ட சம்பவம் அண்மையில் குடந்தனையில் நடைபெற்றது.

இது சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து சம்பந்தப்பட்டவர்களை பருத்தித்துறைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

இசசம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குடத்தனைப் பகுதியில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்காக யு.என்.எச்.சி. ஆர். இனால் வீட்டு பாவனைப்பொருட்கள வழங்கப்பட்டன.

கடந்த 7ஆம் திகதி குடத்தனை நியாப் மண்டபத்தில் வைத்து இப் பொருட்களை வழங்குவதற்காக குறிப்பிட்ட கிராம சேவகர் ஒழுங்குகளைச் செய்துகொண்டு இருந்த பொழுது பலாலி, மயிலிட்டி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வசிக்கும் மக்கள் தமது பெயர் பாவனைப் பொருட்கள் வழங்கும் பெயர்ப் பட்டியலில் இடம்பெறவில்லை எனக் கூறி கிராமசேவகரைத் தாக்கியுள்ளனர்.

இது சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (ப-35)

# செய்தித் துளிகள்

## மகரஜோதி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம் நடாத்தும் 23 ஆவது ஆண்டு மண்டல விரதம் மகரஜோதிப் பெருவிழா கொச்சிக்கடை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் எதிர் வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகி 48 நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச சாரியார் தலைமையில் மகரஜோதிப பெருவிழா நடைபெறும். (ற)

## அலுவலகம் இடமாற்றம்

தென்மராட்சி பிரதேச செயலகம கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள தனியார் கட்டடமொனறிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது வரை காலமும் கண்டி வீதியில் உள்ள பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் இயங்கி வந்த இப் பிரதேச செயலகம் அக்கட்டடத்திற்கான ஒப்பந்த காலம் முடிவடைந்த நிலையில் வேறோர் கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக தென்மராட்சி பிரதேச செயலர் அலுவலகம் முறறாகச் சேதமடைந்த நிலையில் உள்ளதால் தனியார் கட்டடம் ஒன்றிலேயே தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-47)

## காத்தான்குடியில் மீண்டும் ஊரடங்கு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் இஸ்லாமிய மதப்பிரிவினரிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து நேற்று காலை 6.00 மணி முதல் இன்று காலை 6.00 மணி வரை 24 மணிநேர ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரும்புத் தைக்கா பள்ளிவாசலுக்கு கிரனைட வீசபபட்ட சம்பவத்தையடுத்து வன்முறைகள் வெடித்துள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த 15 பேரில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் இருப்பதாகத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது அகில இலங்கை மெய்ஞான இஸ்லாமியப் பேரவைக்குரிய மூசு மௌலானா, கபுறடி நூற்றிற்கும் மேற்பட்ட மாற்று மதப்பிரிவினரால் முற்றுகையிடப்பட்டு தீக்கிரையாக்கப் பட்டது. 35இற்கும் மேற்பட்ட வீடுகள் அடித்து நொருக்கி சேதமாக் கப்பட்டுள்ளது.

சில வீடுகளில் பொருட்கள் வெளியே வீசப்பட்டு தீ வைக்கப்பட்டன.

இதனையடுத்து அந்த வீடுகளில் இருந்தவர்கள் அல்லோல கல்லோலப்பட்டு வெளியேறி தற்போது அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவைக்குரிய பதூரியா ஜும்மா பள்ளிவாசலில் தஞ்சம பெற்றுள்ளார்கள்.

இதனைத்தவிர 10இற்கும் மேற்பட்ட சைக்கிள்களும் ஒரு ஓட்டோவும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. அப்பிரதேச வாசிகளின் தகவலின படி இந்த வன்முறைகள் காத்தான குடி-5 இல் தான் இடம் பெற்றுள் ளன.

ஊரடங்குச் சட்டம் தொடர்பாக பொலிஸார் விடுத்துள்ள அறிவித்தலில இதனை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. புனித ரம்ழான் நோன்பு காலத்தில் இடம்பெற்ற இந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து கவலையடைந்துள்ள முஸ்லிம்கள், ஊரடங்குச் சட்டம் காரணமாக தற்போது தங்கள் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றார்கள். (ற-121)

## பரிசுத்தினமும் பாராட்டுவிழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் பரிசுத்தினமும் பாராட்டுவிழாவும் இன்று புதன் கிழமை பி.ப1.00 மணிக்கு அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பிரதமவிருந்தினராகவும் நல்லூர் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். காங்கேயன் மற்றும் பழைய மாணவரும் மில்க்வைற் தொழில் அதிபருமான க. தவகோபால் (ஜேபி) ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் தரம் 5 புலமைப் பரிசில பரீட்சையில் சித்தியடைந்த இப்பாடசாலை மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ற)

## முஸ்லிம்களை கூட்டமைப்பினர் சந்திப்பர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உள்ள முஸ்லிம் சமூக முக்கியஸதர்களைச் சந்திக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது.

இனப்பிரச்சனைக்கான தீர்வின் முதல்கட்டமாக விடுதலைப் புலிகளினால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டம் குறித்து வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்களை தெளிவுபடுத்தும் நோக்கிலேயே இந்தச் சந்தப்பு இடம்பெறவுள்ளது.

இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள இச்சந்திப்புக்களில் கூட்டமைப்பின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள் ளவுள்ளனர். (க-61)

## இடி மின்னல் தாக்கியது

(புங்குடுதீவு)

கடந்த 12 ஆம் திகதி 4ஆம் வட்டாரம் புங்குடுதீவில் உள்ள வீடடின் மீது இடிமின்னல் தாக்கியது.

இதனால் அவ் வீட்டின் ஒரு பகுதி சேதமாகியதுடன் வீட்டில் இருந்த தென்னை மரமும் எரிந்தது.(ப-126)

## சங்கமம்

(புங்குடுதீவு)

தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் தி.விநாயமூர்த்தி தலைமையில் கடந்த 21 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு புங்குடுதீவு சிறி சித்திவிநாயகர் மகாவித்தியாலயததில் நடைபெற்றுள்ளது. (ப-126)

## க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான பொதுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இம்முறை க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொதுப் பரீட்சை எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி தமிழ் மொழி, 13ஆம் திகதி சமூகக் கல்வி, 15ஆம் திகதி ஆங்கில மற்றும் சமயம், 16ஆம் திகதி கணிதம,17 ஆம் திகதி விஞ்ஞானம், 18ஆம் திகதி தொழில் நுட்பம், 19ஆம் திகதி கவின் கலையும் சித்திர பாடமும், 20,22,23ஆம் திகதிகளில் விருப்பத்துக்குரிய பாடங்கள் ஆகியன நடைபெறவுள்ளன. (ற-5)

## மக்கள் சிரமம்

இலங்கை சமூக சேவைத் திணைக்களததினால் வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப பணம் உரிய திகதயில் வேலணை பிரதேச செயலகத்தினால் தபால் அலுவலகங்களுக்கு அனுப்பபடவில்லை.

இதனால் உதவிப்பணம்பெறுவோர் சிரமங்களை அனுபவிதது வருகின்றனர். (ப-126)

## விபத்தில் நால்வர் பலி

(கொழும்பு)

கொழும்பு ஹோமாகமவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் நாலுபேர் பலியானதுடன் மேலும் நாலுபேர் காயமடைந்துள்ளார்கள்.

மூனறு மோட்டார் சைக்கிள்களும் வானொன்றும் எதிரேவந்த லொறியுடன மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

லொறிச்சாரதி லொறியை விட்டு வெளியேறி தப்பிச் சென்றுள்ளார். இது தொடர்பில் ஹோமாகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (121)

## இடமாற்றம்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட புளியங்கூடல் பிரிவு கிராம உத்தியோகத்தரர்கக் கடமையாற்றிய மு. விஜயரெத்தினம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுவிற்கு யாழ். அரச அதி[illegible]னால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் தற்போது கொக்குவில் மஞ்சவனப்பதிப் பிரிவு (யா/128) கிராம உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார்.

இதேவேளை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கரம்பொன் கிழக்கு (யா/52) கிராம உத்தியோகத்தராக கடமையாற்றிய க. சகாதேவன் புளியங்கூடல் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார. (ப-47)

## முறைப்பாடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தை வளாகத்துக்குள் கட்டாக்காலி ஆடுகளின தொல்லைகள் குறித்து வியாபாரிகள் நகரசபை அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து கட்டாக்காலி ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு கட்டாக்காலி ஆடு,மாடுகளின் உரிமையாளர்களுக்கு அறவித்தல் விடுக்கப்பட்டுள்ளன. (ப-47)

## வீதிசேதம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு வைத்தியசாலைச் சந்திக்கும், புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கும் இடையில் சுமார் 250 மீற்றர் தூரமான வீதி பல வருடங்களாகத் திருத்தப்படவில்லை.

இதனால் அவ் வீதியால் பய[illegible]போர் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். (ப-126)

## உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கான அபிவிருத்திச் சபை கடந்த ஞாயிறன்று புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இச் சபையின் தலைவராக ஓய்வு பெற்ற பிரதேச செயலர் க.கேதீஸ்வரனும உபதலைவராக டாக்டர் எஸ். எஸ்.அருளானந்தனும், செயலாளராக வைத்தியசாலையின் பொறுபதிகாரி டாக்டர் எஸ்.அம்பிகைபாகனும், பொருளாளராக கிராமசேவையாளர். க.இராசரத்தினமும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஒன்பது பேர் நிர்வா[illegible] உறுப்பினர்களாகவும் தெரிவு [illegible]யப்பட்டுள்ளனர். (ப-16)

## கனேடியத் தூதரகம் மீண்டும் திறப்பு

(கொழும்பு)

ஒருவார காலத்திற்கு மேலாக மூடப்பட்டிருந்த கொழும்பு கனேடியத்தூதுவராலயம் நேற்று முன்தினம மீண்டும் திறக்கப்பட்டது.

விசா பெறுவதற்காக தூதரகத்திறகுச் சென்ற தேரர் ஒருவரின் கடவுச்சட்டில காணப்பட்ட துகள்கள அந்திரெக்ஸ் எனக் கருதப்பட்டதாலேயே கனேடியத் தூதரகம் மூடப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-61)

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி - குறள்

வலம்புரி

## பொறுப்பானவர்கள் உறங்கினால் பொதுமக்களே தீர்ப்பை வழங்குவர்

யாழ். குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ளது. அரச கட்டுப்பாட்டுக்குள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டதிலிருந்து இவ் நிலைமை இன்றுவரை நீடிக்கின்றது.

வீதி விபத்துக்கள் முதல் களவு, கொள்ளை, கடத்தல், கசிப்பு என்ற கலாசாரம் எங்கும் வியாபித்து மக்களைப் பெரும் அச்சத்துக்கு ஆளாக்கியுள்ளது.

இரவுவேளைகளில் நிம்மதியாகத் தூங்குவதற்கே முடியாமல் யாழ்ப்பாணத்து மக்கள் துன்பப்படுகின்றனர். பொலிஸ் நிலையம், நீதிபரிபாலனம், சட்டவாதங்கள் என்றெல்லாம் பகல் வேளைகளில் காட்சி தரும் "மக்கள் பாதுகாப்பு" அமைப்புக்கள் இரவில் மட்டும் உறங்கிவிடுவது ஏனோ என்ற பலமான கேள்விகள் பொதுமக்களிடையே எழுகின்றது.

களவு கொடுத்தபின் முறைப்பாடு செய்வதற்கான அமைப்பே பொலிஸ் நிலையம் எனில் அத்தகையதொரு அமைப்பு யாழ்ப்பாணத்தில் தேவையற்றதாகவே இருக்கும்.

இரவு வேளைகளில் வீடுகளை உடைத்து பெறுமதியான பொருட்களை களவெடுப்போரின் துணிகரம் மிகவும் அச்சம் தருவதாகும். இத்தகைய துணிவிற்குப் பின்னால் இருக்கக்கூடியவை குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் அது வேலிக்குக் கூட ஆபத்தாக அமையலாம்.

எனவே அரச கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ்ப்பாணத்து மக்கள் அனுபவிக்கும் அச்ச வாழ்வை அகற்ற பொருத்தமான நடவடிக்கைகளை பாதுகாப்பு மற்றும் நீதிபரிபாலன அமைப்புகள் எடுக்க வேண்டும்.

குறிப்பாக வீதி விபத்துக்களை தடுப்பதில் போக்குவரத்துப் பொலிஸார் பொருத்தமான திட்டங்களை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். அதற்காக சந்திகளில் நின்று வாகனங்களைத் தடுத்து நிறுத்தி தண்டப் பணம் விதிப்பதுவே பொருத்தமான திட்டம் எனக் கருதினால் அது மிகப் பெரும் தவறாக இருக்கும்.

மாறாக வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் மின்னொளி விளக்குகளை சந்திகளில் பொருத்துவது, ஒழுங்கான முறையில் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் வீதிகளில் நின்று வாகனங்களின் நெரிசல்களை கட்டுப்படுத்துவது விபத்துக்கள் குறித்த விழிப்புணர்வுகளை வாகன சாரதிகளிடையே ஏற்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் உடன் அமுலாக்கப்படவேண்டியவை ஆகும்.


யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கடந்த 20 வருட காலமாக இடம்பெற்ற யுத்தம் மக்களை பெரிதாக பாதித்துவிட்டது. அதிலும் குறிப்பாக வீதிகளில் செல்லும் விதிமுறைகளில் அவர்கள் இம்மியும் அக்கறையற்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

இஃது ஒரு பழக்கதோசத்தின் விளைவாகவும் இருக்கலாம். கொழும்பு போன்ற மாநகரங்களில் விபத்துக்கள் இடம்பெறாமல் பாதுகாக்கப்படுகிறது எனில் அங்கு வீதி விதிமுறைகள் ஒழுங்குமுறையாக கடைப்பிடிக்கப்படுகின்றதென்பதே பொருள். அதற்கேற்ற வகையில் அங்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆனால், வாகன நெரிசல் அதிகரித்து வரும் யாழ்ப்பாணத்தில் மட்டும் விபத்தைத் தடுக்கும் வழிவகைகள் செய்யப்படவில்லை. எனவே இந்த குறைபாடு நீக்கப்படவேண்டும். அடுத்து களவு விடயத்தை உடன் கட்டுப்படுத்துவதற்கும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும். இது கடினமெனில் மக்களின் நலன் கருதி வன்னிப் பிராந்தியத்தில் எவ்வாறு களவில்லாத சூழ்நிலை இருக்கின்றதோ அத்தகைய சூழ்நிலையை இங்கு ஏற்படுத்த பொலிஸார் அனுமதிக்கவேண்டும். இல்லையேல் மக்கள் தங்கள் கைகளில் தீர்ப்பை எடுத்துக்கொள்வர்.

# வட-கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைத்து அரசியல் வாதிகளும் இணைவர்

## அமைச்சர் அனுரா நம்பிக்கை



(கொழும்பு)

வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் சகல அரசியல் வாதிகளும் கலந்து கொள்வார்கள் எனத் தான் நம்புவதாக சுற்றுலாத்துறை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அனுராபண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிரந்தர சமாதானத்திற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தற்போதுள்ள ஆளும் கூட்டமைப்பு அரசாங்கம் முன்னெடுத்துச் செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற உற்பத்தித் திறனை முன்னேற்றுவதற்கான செயல் திட்டத்தின் ஆரமப வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில்,

எமது பொறுப்புக்கள் தொடர்பாக நாம் மிகவும் கவனமாக செயற்பட்டு வருகின்றோம். எதிர் காலத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் நாம் கவனமாகவே உள்ளோம். உதாரணமாக எரிபொருள் விலை யேற்றம் எமது கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

வடக்கு - கிழக்கு பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நிரந்தர சமாதானத்தை நோக்கியே நாம் செயற்பட்டு வருகின்றோம். இந்த ஐக்கிய நடவடிக்கையில் பொறுப்புவாய்ந்த எல்லா அரசியல் வாதிகளும ஈடுபடுவர் என்று நம்புகின்றோம்.

இரண்டாகப் பிளவுபட்டுள்ள நாட்டை ஒன்றிணைக்கும் செயற்பாட்டில் அவர்கள் இணைந்து கொள்வார்கள்.

இதனால் இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு அரசியல் கட்சியும் இந்த நிலைமையைப் புரிந்து கொண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மாத்திரமன்றி, நாட்டின் சீரழிந்து போயுள்ள பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து மக்களுக்கு சுபீட்சமான வாழ்க்கை ஒன்றையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர் என உறுதியாக நம்புகிறோம் எனவும் தெரிவித்தார். (ற-121)

# மாவீரர்களின் தியாகமும் அர்ப்பணிப்புமே சமாதானச் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது

## பொன்தியாகம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எமது மாவீரர்களின் தியாகமும், அர்ப்பணிப்புமே இன்று சமாதானச் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது என தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் தெரிவித்துள்ளார்.

புலிகளின் குரல் ஒலிப்பதிவாளரும் ஒலிபரப்பாளருமான மேஜர் ஜீவாவின் வீர வணக்க நிகழ்வில் நினைவுரையாற்றும் போதே அவர் இதனைத் தெவித்தார்.

புலிகளின் குரல் நிறுவன அரங்கில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்ற வீர வணக்க நிகழ்வில் அவர் மேலும் கருத்துரைக்கையில்,

தமிழினம் இன்று உலகின் முன் தலைநிமிர்ந்து நிற்கும் வகையில் பணியாற்றியவர்கள் மாவீரர்களே. மாவீரர்களின் அர்ப்பணிப்புக்களும அவர்களின் தியாகங்களும் தமிழினத்துக்கு விரைவில் ஒரு நல்ல வழியினைக் காட்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய புலிகளின் குரல் நிர்வாக இணைப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், புலிகளின் குரலின் அரம்பகால வளர்ச்சியில் பெரும் பஙகாற்றியவர் மேஜர் ஜீவா.

போர் நெருக்கடிகள் சூழ்ந்திருந்த காலத்தில் இளம் வயதினைக் கொண்ட இவர் தனது திறைமைகள் மூலம் புலிகளின் குரலில் ஒலிப்பதிவு, ஒலிபரப்புப் பணிகளில் பெரும் பங்காற்றிய போராளியாக இவர் திகழ்ந்தார் என்றார்.

மேஜர் ஜீவாவின் நினைவுகல் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

யாழ். குருநகரில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட திருவுருவப்படம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் புலிகளின் நிறுவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

புலிகளின் குரல் அரங்கில் மேஜர் ஜீவாவிற்கு வீரவணக்க கூட்டம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம, கிளிநொச்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் காண்டீபனும் ஏற்றி வைத்தனர்.

மேஜர் ஜீவாவின் திருவுருவப் படத்துக்கு அவரின் சகோதரன் இசையழகன் ஈகச சுடரேற்ற, அவரது தாயார் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து போராளிகள், மக்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

புலிகளின் நிறுவன நிர்வாக மேலாளர் இ. இராஜேஸ்வரன தலைமையில் இடம் பெற்ற இவ் வீர வணக்க நிகழ்வில், நினைவுரையினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம், புலிகளின் நிறுவன் நிகழ்ச்சித் தயாரிப்பாளா ஆதிலட்சுமி சிவகுமார், புலிகளின் நிறுவன முத்த அறிவிப்பாளர் ரட்ணா ஆகியோர் நிகழ்த்தினர்.

வீரவணக்க உரையினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து திருவுருவப்படம் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு,அங்கு பூரண இராணுவ மரியாதையுடன் நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. (க-121)

## அத்தியாவசிய பொருட்களுக்கான "வற்வரி" நீக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

சீனி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கான "வற்வரி" நீக்கப்பட்டுள்ளதால் அவற்றின் விலை குறைவடைந்துள்ளதாக வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

ஆனால் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டண அதிகரிப்புக்களால் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கின்றதாக ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மாதத்திலும் பார்க்க இந்த மாதத்திலேயே பொருட்களின் விலை வேகமாக அதிகரித்து வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (க)

## கரவெட்டியில் வாழும் மாவீரர் குடும்பங்களுக்கு

(கரவெட்டி)

இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள மாவீரர் தினத்தில், மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளதால், கரவெட்டிப் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து மாவீரர்களின் பெற்றோர்களையும், கரவெட்டியிலுள்ள அரசியல் துறை பணிமனையில் பெயர் விபரங்களை பதிவு செய்யுமாறு வடமராட்சி கரவெட்டி தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் கேட்டுள்ளார்.

நவம்பர் 21 ஆம் திகதி கரவெட்டி பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமராட்சியைச் சேர்ந்த பல மாவீரர்களது வித்துடல்கள், வேறு இடங்களில் உள்ள துயிலும் இல்லங்களிலும் விதைக்கப்பட்டிருப்பதால் மாவீரர் நாள் அஞ்சலிக்காக அவ்விடங்களுக்கு செல்லவுள்ள பெற்றோர்களை உடனடியாக விபரங்களைப் பதிவு செய்யுமாறும் இதற்கேற்ப அவர்களுக்கான போக்குவரத்தும் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-101)

## எதிர்வரும் சனியன்று சைவ நெறித் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படவிருக்கும் சைவநெறித் தேர்வு எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இத் தேர்வுக்கு விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு தேர்வுச் சுட்டிலக்கங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவை இதுவரை கிடைக்காதவர்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் கேட்டுள்ளார்.

ஒவ்வொரு பாடசாலைகளும் தமக்குரிய வினாப் பொதியை முன்பு அறிவிக்கப்பட்டபடி இணைப்பு நிலையங்களில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இம் முறை சைவநெறித் தேர்வில் சுமார் 82 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

எங்கு பார்த்தாலும் செயல்முறை மதத்தைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். இவற்றை எல்லாம் ஆராய்நது பார்த்தால் வருவது ஒரேயொரு கருத்து- அதுதான் மனிதநேயம். மதம் என்பது அவ்வளவு தானா? செயல்முறை கிறிஸ்தவம் பற்றி இங்கே தினமும் கேட்கிறோம். அதாவது ஒருவன் சக மனிதர்களுக்கு ஏதோ நன்மை செய்து விட்டான். எல்லாம் அவ்வளவு தானா?

சுவாமி விவேகானந்தர்

## வணிகச்சுடர் இன்று வெளியீடு




கொக்குவில் இந்துக் கல்லூரியின் வணிக மாணவர் ஒன்றியத்தின் 'வணிகச் சுடர்' வெளியீடு இன்று காலை 10 மணிக்கு கல்லூரியின் புஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் தொடக்கவுரை ஆற்றுவார்.

பிரதம விருந்தினராக வைத்தீஸ்வர கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் கலந்து கொள்வார்.

நூல் ஆய்வினை யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.சிவராஜா நிகழ்த்துவார். (ந)

## ஆணின் சடலம் மீட்கப்பட்டது

(கோயிலாக்கண்டி)

சாவகச்சேரி கோயிலாக்கண்டிதுறைக் கடலில் நேற்று முன்தினம் மிதந்த ஆணின சடலம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் மீட்கப்பட்டது.

நாவற்குழி தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அரசமுடி (வயது 70) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது சடலம் நேற்றுமாலை உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. சுகவீனமுற்றிருந்த இவர் நேற்று முன்தினம் பகல்வேளை வீட்டிலிருந்து வெளியே சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-129)

## சிறுவர்கள் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையச் சென்ற இரு சிறுவர்கள் விடுதலைப் புலிகளினால் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாகப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் வைத்து மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், குறிப்பிட்ட இரு சிறுவர்களையும் ஒப்படைத்தார். இந்தச் சிறுவர்கள் திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். (த-08)

## தமிழ்விழா

யா/பெரியபுலம் மகாவித்தியாலய தமிழ் விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ச.சஞ்சிகா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ற)

# சிறுமி மீது பாலியல் வல்லுறவு; கொக்குவில் மேற்கில் சம்பவம்

## இளைஞனுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு பீடாரி கோவில் மேற்குப் பகுதியில் 14 வயதுச் சிறுமி ஒருத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டையைச் சேர்ந்த சிறுமியே வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக எ.நிரோஜன் (வயது 22) என்ற இளைஞன் சந்தேகத்தின் பேரில் நேற்றுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரைப் பதினான்கு நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் மேற்படி வல்லுறுவுச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, பிரஸ்தாப இளைஞர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட சமயம் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிலிருந்து தப்பியோடினார். கடும் பிரயத்தனத்தின் மத்தியில் பொலிஸார் இளைஞனை மடக்கிப்பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# தேசிய ஆலோசனைச் சபையின் சமய விவகாரக் குழு நேற்று கூடியது

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனை சபையின் சமய விவகார குழுவின் கூட்டம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

தேசிய ஆலோசனை சபையின் சமய விவகாரங்களுக்கான குழுவின் கூட்டம் சர்வமதத் தலைவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆறு விடயங்கள் பற்றியே சர்வமதத் தலைவர்கள் தமது கவனத்தைச் செலுத்தினார்கள்.

பிரச்சினைக்குச் சமாதான முறையிலும், வன்முறைகளற்ற வகையிலும் தீர்வுகளைக் காண்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

வடக்குக் கிழக்கின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக நாட்டின் அரசியலில் புதிய மாற்றங்களைக் கொரண்டு வருவது பற்றியும் இங்கு முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் அதிகாரப் பகிர்வு, ஜனநாயகத்தைப் பலப்படுத்தல் போன்றவை முக்கிய தொனிப்பொருளாக இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-121)

## அமைச்சர்...

விடயங்கள் தொடர்பாக கூட்டமைப்பின் பிரதான பங்காளியான எமது கட்சியுடன் கலந்துரையாடப்படவில்லை. அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவினை மக்கள் தற்போது பொறுத்துக்கொண்டிருந்த வேளையில் அதனை மேலும். அதிகரிக்கும் வகையில் அமைச்சர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ந்து ஜனாதிபதி தனது எதேச்ச அதிகாரத்தின் ஊடாக அமைச்சர்களை நியமிப்பாராயின் அதற்கெதிராக. கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என ரில்வின் சில்வா அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (121)

## இந்திய இராணுவத்....

பந்தம் தற்போது தயாராகவுள்ளது. இதில் இரண்டு நாடுகளும் கைச்சாத்திடவேண்டும். அப்போது தான் இரண்டு நாடுகளும் தமது பாதுகாப்பை பலப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று கூறியதுடன், மிக விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் கூறினார். (க-08)

## ஜனாதிபதியின் யோசனைகளை...

நேற்று செய்தியாளர் மாநாட்டைக் கூட்டினார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது,

தமிழீழ விடுத்லைப் புலிகள் தாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத் திட்டவரைபு நிலைப்பாட்டில் இன்னமும் உறுதியாக இருக்கின்றார்கள்.

இடைக்காலத் திட்டவரைபில் அவர்கள் எவ்வித மாற்றங்களையும் செய்யவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு அதன் பலாபலன்களை மக்கள் அனுபவிக்கத் தொடங்கிய பின்னரே உறுதியளிக்கப்பட்ட நிதியுதவியை வழங்க முடியும்.

ஜனாதிபதி முன்வைத்த யோசனைகள் சிலவற்றை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் எடுத்துவிளக்கியுள்ளேன். இந்த யோசனைகளை விடுதலைப் புலிகள் ஆராய்வார்கள் என திடமாக நம்புகின்றேன்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களின் நியாயமான பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. இதன்மூலம் இருதரப்பினரும் ஓர் உடன்பாட்டிற்கு வந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் நோர்வே தற்போதும் சளைக்காது ஈடுபட்டுவருகின்றது. எனினும் பேச்சுவார்த்தை மேசையில் இருதரப்பினரையும் சந்திக்கவைப்பது சிக்கலான விடயமாகவே இருக்கின்றது.

இருந்தபோதும் இருதரப்பினரும் மீண்டும் யுத்தத்திற்கு செல்வதில்லை என்பதில் ஒத்த கருத்தை கொண்டுள்ளனர் என்பது தெரிகிறது. பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என விரும்பினால், அது இருதரப்பினரதும் கைகளில்தான் தங்கியுள்ளது. அது அவர்களுடைய பொறுப்பு.

பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச சமூகம் தேவையான உதவிகளை வழங்கத் தயாராகவே இருக்கிறது. மேலும், இலங்கையில் சமாதானம் நிலைநாட்டப்படுவதற்கோ அல்லது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கோ தாங்கள் தடையாக இல்லை என ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க என்னிடம் தெரிவித்தார்.

அத்துடன் சர்வதேச சமூகம் உறுதிமொழி வழங்கியதற்கு இணங்க சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அந்நிதியுதவியை வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். எனினும், அக்கோரிக்கையை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது. அக்கோரிக்கையை நிராகரித்துவிட்டோம் என்றார்.

இதேவேளை, நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அகாசியுடன் நடைபெற்ற சந்திப்புக் குறித்து கருத்துவெளியிட்ட சு.ப. தமிழ்ச்செல்வன் ஜனாதிபதியிடமிருந்து ஆக்கபூர்வமான செய்திகள் எவையும் கிடைக்கவில்லை. வழமைபோல் அரசாங்கமும், ஜனாதிபதியும் கூறும் தகவல்களைத் தான் ஜப்பானியப் பிரதிநிதிகள் கொண்டு வந்திருந்தனர்.

இத்தகவல்கள் அவர்களிற்குப் புதிதாக இருக்கலாம். ஆனால் எமக்குப் பழைய கதைதான் என்று தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-08)

## சிறுவர் உரிமை கருத்தரங்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று வரணியில் அமைந்துள்ள ஆ[illegible]ய நிலையத்தில் மனிதஉரிமைகள் ஆ[illegible]க் குழுவால் நாளை காலை 8.30 மணிக்கு நடாத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் பொருத்தமான ஆசிரியரை இக்கருத்தரங்கிற்கு அனுப்பிவைக்குமாறும், ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த-29)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி; மற்றவர் காயம்

(கொழும்பு)

பாணந்துறை பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இன்னொருவர் காயமடைந்துள்ளார்.

இரண்டு ஆயுதக்குழுக்களுக்கி[illegible]யில் ஏற்பட்ட மோதல் காரணமாகவே இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இச்சம்பவத்தின பின்னர் துப்பாக்கி சூடு நடத்தியவர்களின் வீட்டிற்குச் சென்ற குழுவொன்று வீட்டிற்குத் தீவைத்து எரித்துள்ளது.

இச் சம்பவங்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8)

## தேசிய ஆலோசனைச்...

களை மேற்கொள்ளப்போவதாக தான் ஆரம்பம் முதலே கூறிவந்ததாகவும், அதனால் ஐக்கிய தேசியக்கட்சி இதில் கட்டாயம் பங்கு பற்ற வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி கலந்துகொள்வதில்லை என்ற முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும் எனவும், மீள் பரிசீலனையின் முடிவை தனக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

ஆலோசனைச்சபை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டினை ரணில் விக்கிரமசிங்க ஜனாதியிடம் விளக்கிக் கூறினார்.

தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சிகளை ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனங்களின் அடிப்படையில் உடனடியாக இருதரப்பும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும் என ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

நாட்டில் இருதசாப்த காலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையின் மூலமாகவே விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட இணக்கப்பாடு. ஆதலால் அதனை தான் நினைவுபடுத்த தேவையில்லை என்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் தெரிவித்தார். (த-121)

## ஜனாதிபதி...

யாடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியா சென்று இந்தியப் பிரதமர் உட்பட பல அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-8)

ஹற்றன் நஷனல் வங்கி
யாழ்ப்பாணம்

அடகுப் பொருள்களை மீட்டல்/ விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளையில் அடகுச் சேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு!

நீங்கள் பெற்றுள்ள அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிக்கப்பட்ட விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒருவருட காலத்துக்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதை மீண்டும் அறியத்தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப் பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும், கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி கடனின் காலாவதித் திகதியினை நீடித்துக்கொள்ளலாம்.

ஒருவருட காலத்துக்கு மேற்பட்ட அடகுப் பொருள்களை மீட்க/ காலாவதித் திகதியை நீடிக்க ஆவனசெய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருள்கள் 20.11.2004 அன்று ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

(C/671)

முகாமையாளர்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.